# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

பதிவு இல:
ISSN 2792-1026

+94776391188 www.skymediasl.com skytamil.lk@gmail.com

மாதமிருமுறை இதழ் - 12 05 ஆகஸ்ட் 2021 @skytamil.lk



சாய்ந்தமருது இளைஞனின் ஓவியத் திறமை பற்றிய ஓர் அலசல்




அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியம் ஓர் பார்வை



தமிழ் நெஞ்சம் சிறு அறிமுகம்



எம்.எச்.எம் அஷ்ரப்



[ஓர் எழுத்தாளர், கவிஞர், பாடலாசிரியர், சிறுவர் படைப்பாளர், சஞ்சிகை துணையாசிரியர் மற்றும் ஊடகவியலாளர்]

# எச்.எப். ரிஸ்னா

## அவர்களுடனான நேர்காணல்

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

@skytamil.lk

மாதமிருமுறை | இதழ் - 12 | 5 ஆகஸ்ட் 2021





## தமிழ் நெஞ்சம் சிறு அறிமுகம்

11 பக்கம்




14 பக்கம்

## சாய்ந்தமருது இளைஞனின் ஓவியத் திறமை பற்றிய ஓர் அலசல்








## எம்.எச்.எம் அஷ்ரப்

19 பக்கம்



22 பக்கம்

## அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியம் ஓர் பார்வை








[ஓர் எழுத்தாளர், கவிஞர், பாடலாசிரியர், சிறுவர் படைப்பாளர், சஞ்சிகை துணையாசிரியர் மற்றும் ஊடகவியலாளர்]

## எச்.எப். ரிஸ்னா

அவர்களுடனான நேர்காணல்

24 பக்கம்

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்


**பிரதம ஆசிரியர்:**

ஜே.எம்.பாஸித்

**இணையாசிரியர்:**

நுஸைலா பதுர்தீன்
பாத்திமா ஷிப்னா ஆதம்

**நிர்வாக குழு:**

றொஸான் முஹம்மட்
அஸ்வர் ரிஸ்வி

**ஆசிரியர் குழு :**

எம்.நஸ்றீன் பானு
பாத்திமா சிரோணி
பஹ்ரியா பாயிஸ்
ஷஹ்னா ஸப்வான்
பாஷிரா ஜுனைடீன் - ஊடகவியலாளர்
முஹம்மட் ஹாசில் - ஊடகவியலாளர்
நியாஸ் பரீட் (சிராஜி) - கத்தார்
ஆர்.எம்.சப்ராஸ் - ஊடகவியலாளர்
அகீப் நஸீர் - Graphic Designer
தி.தர்சினி
எம்.ஜ.எம். முபீத்
ஜவ்சன் அஹமட் - ஊடகவியலாளர்
பாதிமா முனீரா
ஷகீனா ஷாகிர்

**ஆலோசகர்கள் :**

கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம். பியாஸ் (நளீமி)
வசீமுல் அக்றம் - சட்டத்தரணி
ரிம்ஸா முஹம்மத் - எழுத்தாளர்
அமின் மொஹமெட் (தமிழ்நெஞ்சம்)
பிஸ்ரின் முஹமத் - ஊடகவியலாளர்
ரினூசா நௌஷாட் - ஊடகவியலாளர்
ஜெஸீம் ஏ. ஹமீட் - ஐக்கிய இராஜ்ஜியம்
வாக்கிர் பாரிஸ் - Faby's Product


இறைவனின் அருளாளும், துணிந்தெழு வாசகர்களின் ஆதரவுடனும், சஞ்சிகை ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும், புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது எமது துணிந்தெழு சஞ்சிகை. புகழனைத்தும் இறைவனுக்கே

*அல்ஹம்துலில்லாஹ்!*

துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எல்லாம்வல்ல இறைவனுக்கும், வாசகர்களுக்கும், சஞ்சிகை ஆசியர்குழாமிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.



**ஜே.எம்.பாஸித்**
**பணிப்பாளர்**
**ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை**

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனில் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்


+94776391188

www.skymediasl.com skytamil.lk@gmail.com


Scan QR Code

விரைவில்...

GET IT ON Google Play | Available on the App Store

#Thuninthelu #skytamil.lk skytamil.lk skytamil.lk




# ஆசியாவின் மிகச்சிறந்த 100 சாதனையாளர்களில் "Asian Excellence Male Personality Award-2021"

## எனும் சர்வதேச உயர் விருதிற்கு

### துணிந்தெழு சஞ்சிகை பிரதம ஆசிரியர் ஜே.எம்.பாஸித் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.



தொகுப்பு:
**பாத்திமா ஷிப்னா ஆதம்**

ஏற்கனவே பிரபல்யமானவர்களைப் பற்றி பேசிப்பேசியே பிரபலமாகிக் கொண்டிருக்கும் திறமையானவர்களை இந்த சமூகம் மறந்து விடுகிறது. எந்தவொரு பின்புலமும், குடும்பப் பின்னணியும் இல்லாமல் தனது தனித் திறமை மூலம் இன்று சமூகத்தில் பிரபல்யமாகியுள்ள ஒரு சாதாரண நபரைப் பற்றி நான் பேச விரும்புகிறேன். பிறப்பு மற்றும் இறப்பு என்பது எல்லா மனிதர்களுக்கும் பொதுவான ஒன்று ஆனால் ஒரு மனிதன் தனது பிறப்பு முதல் இறப்பு வரையான காலகட்டத்தை எவ்வாறு வடிவமைத்துக் கொள்கிறான் என்பதிலேயே ஒவ்வொரு மனிதனுடைய தனித்துவமும் மாறுபடுகிறது.

இந்தச் சமூகத்தில் தனக்கென்று ஒரு தனித்துவமான அடையாளத்தை உருவாக்குவது என்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. அந்த வகையில் விடாமுயற்சிகளோடும், கடின உழைப்போடும், பல இன்னல்களுக்கு மத்தியில் சிறிதும் சளைத்து விடாமல் தனது இலட்சியத்திற்காகப் போராடி Asian Excellence Male Personality Award-2021 என்ற விருதுக்கு பெயர் பரிந்துரைக்கப்படும் அளவுக்கு தனக்கென்று ஒரு தனித்துவமான அடையாளத்தை இந்த சமூகத்தில் உருவாக்கி இருக்கிறார் துணிந்தெழு சஞ்சிகையின் பணிப்பாளர் ஜெ.எம்.பாஸித் அவர்கள். இந்த விருது என்ன காரணத்திற்காக இவருக்குப் பரிந்துரைக்கப்பட்டது? அப்படி பாசித் எதைத்தான் சாதித்துள்ளார் இந்தச் சமூகத்தில்? என்ற கேள்விகளுக்கு விடையாக இந்தக் கட்டுரை அமையும்.

அந்தவகையில் Field of Mass Media, Business Entrepreneurship and Education as "Excellent Asian Male Mass Media Personality, Inspiring Entrepreneur, Digital Marketer, IT & Media Lecturer and Social Activist" இந்தத் தகமைகளின் கீழ் தான் இவருக்கு இந்த விருது பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஒரு மனிதன் தனது வாழ்வில் அவன் ஆசைப்பட்ட ஒரு இலக்கை அடைய முடியாவிடினும் அந்த இலக்கை அடைவதற்காக அவன் எடுத்துக்கொண்ட அந்த முயற்சிகள் நிச்சயம் பாராட்டப்பட வேண்டும் என விரும்புகிறவள் நான், அப்படியிருக்க இன்று சமூக வலைத்தளங்களில் பலரின் பாராட்டுக்களுடன் வெற்றி நாயகனாக திகழ்ந்து கொண்டிருக்கும் பாசித் அவர்களின் வாழ்க்கையில் அவர் இந்த வெற்றிக்காக மேற்கொண்ட முயற்சிகளைப் பற்றி பேசுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

பாடசாலைக் காலங்களில் இருந்தே கணினித் துறையிலும் ஈடுபாடு கொண்டிருந்த பாசித் தனது உயர் கல்விக்குப் பின்னர் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (NVQ தரம் -5) கற்கைநெறியை தொழிற் பயிற்சி நிலையத்தில் பூர்த்தி செய்தார். பாடசாலைக் கல்வியின் பின்னர் தனது கவனத்தை முழுமையாக டிஜிட்டல் மீடியாவில் செலுத்தினார். டிப்ளமோவை நிறைவுசெய்த பின்னர் இவர் எந்த ஒரு தொழில் வாய்ப்பும் இல்லாமல் இருந்தார்.

அந்தக் கால கட்டங்களில் இவருக்கு தெரிந்த நண்பர்கள் மூலமாக ஒரு சில டிசைன் செய்யும் வேலைகள் அவ்வப்போது இவருக்கு வரத்தொடங்கியது. அவைகளை தனது வீட்டில் இருந்தவாரே செய்துவந்தார். இவ்வாறு இவர் டிசைன் செய்த பேனர், கட்டவுட் என்பன மக்கள் மத்தியில் ஒரு அளவாகப் பிரபல்யமடைய இவருக்கு ஒரு டிஜிட்டல் பிரிண்ட் செய்யும் நிறுவனம் ஒன்றில் தொழில் வாய்ப்பு கிடைத்தது. அதில் ஒரு சில மாதங்கள் இணையதள வடிவமைப்பாளராகப் பணி புரிந்தார். அதனைத் தொடர்ந்து இவர் இலங்கையில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளில் இருக்கும் நிறுவனங்களுக்கும் இணையதள வடிவமைப்பாளராக செயற்படும் வாய்ப்புக் கிடைத்தது.

பின்பு பாஸித் தனக்கென்று ஒரு டிஜிட்டல் பிரிண்டிங் நிலையத்தை ஆரம்பித்து தனக்கென்று ஒரு நாமத்தை உருவாக்க நினைத்தார். அதுதான் ஸ்கை கிராபிக்ஸ். தனது தன்னம்பிக்கையை மூலதனமாக எடுத்துக் கொண்ட பாஸித், தனது திறமையை மட்டும் முழுமையாக நம்பி தான் பணி புரிந்த வேலையை விட்டுவிட்டு தனக்கென்று சொந்தமாக ஒரு டிஜிட்டல் பிரிண்டிங் நிலையம் ஒன்றை ஸ்கை கிராபிக்ஸ் எனும் பெயரில் ஆரம்பித்தார். இதுதான் இவரது வாழ்க்கையின் வெற்றிப் பாதைக்கான முதல் அடித்தளமாக அமைந்தது. ஒரு வெற்றிப் பாதை தன்னம்பிக்கை என்ற இடத்திலிருந்து ஆரம்பமாகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

இவ்வாறு ஸ்கை கிராபிக்ஸ் என்ற நாமத்துடன் தனது வடிவமைப்பாளர் தொழிலை நடாத்திச் சென்ற வேளை இவரின் கிராபிக்ஸ் எடிட்டிங் திறமை "ஸ்கை கிராபிக்ஸ்" என்ற பெயரின் கீழ் மேலும் பேசப்பட ஆரம்பித்தது. இது இவரின்

(47ஆம் பக்கம் பார்க்க) »



# கரைகாணா சிறு படகு

ஜெ. சஜீஹா பேகம்
கல்முனைக்குடி

“அவளை படிப்ப விட்டு நிறுத்திட்டீங்களா?”என்ற அதிபரின் கோபம் நிறைந்த கேள்வியில் அவர் உறைந்தார்..............

முன்னமே சொல்லுகிறேன், தெளிவு பெற இறுதி வரை செல்லுங்கள் ஏனெனில் எனது தலைப்பு சிலருக்கு ஏன் பலருக்கே குழப்பத்தை ஏற்படுத்தலாம்.
இது கதை வடிவா, இல்லை நாடக மேடையா அதுவும் இல்லாவிட்டால்?!..... அது உங்கள் விருப்பமாக இருக்கட்டும் ஆனால் இதிலிருந்து நானும் நீங்களும் மீண்டாலே போதும்.

தொடர்கிறது........

“ஒரே இந்த போன நோன்டிகிட்டு அந்த பெட்டுலயே கிடகாள், ஒரு நாள் இல்ல ஒரு நாள் அத நொருக்கி தூளாக்குறன் பாரு” என்று அடுத்த மாதம் மணமகள் கோலம் பூணவிருந்த 25 வயதான பாத்திமாக்களுக்கு திட்டித் தீர்த்த தாய்மார்கள் உண்மையில் ஏதோ புண்ணியம் செய்திருக்க வேண்டும். இதிலென்ன புண்ணியம் வேண்டிக் கிடக்கு என உங்கள் மனம் ஆவேசப்படலாம். காலம் மாறிப்போச்சு என பெருமை பேசுவதா இல்ல பழய காலம் கோரி உண்ணாவிரதம் இருப்பதான்னு ஒண்ணுமே புரியல. ஒரு நாட்டிலிருந்து பிற நாடு செல்வதை ஆச்சரியமாக பார்த்த மக்களும் தொலைவில் உள்ள உறவோட பேசப் போராடிய மக்களும் கால மாற்றத்தை வரவேற்றதைப் போலவே நானும் வரவேற்கிறேன்.

நான் கால மாற்றம் என்பது அப்படிப்பட்ட முன்னேற்றங்களை அல்ல மாறாக முன்னேற்றங்களை தன் விருப்பில் பயன்படுத்தும் சமூகத்தின் கால மாற்றம். குறிப்பாக இந்த ஸ்மாட் ஃபோன்களைத்தான் என்றால் நீங்கள் தெளிவு பெறுவீர்கள். அதிலும் நான் 19ஸ் கிட்ஸ். நானெல்லாம் இந்த ஃபோன சொந்தமாக்க யுனிவர்சிட்டி செலக்ட் ஆகவேண்டிருந்திச்சி. அதுவும் ட்ரான்ஸ்பர் முறையில அக்காவின் பழய ஃபோன் முதல்ல எனக்கு புது ஃபோனா இருந்திச்சி. ஆனா இப்ப இருக்குற சிறுசுகள் வேற மாதிரி. நாங்க தப்பினம்னு சந்தோஷப்பர்ரதா இல்ல அவங்க பாவம்னு கவலப்பர்ரதா ஒன்னுமே புரியல. நான் 21 வயசுல போனபத்தி ஒவ்வொன்னா கத்துகிட்டன் அதுல முகநூல் ஏதோ கெட்ட பழக்கம்னு ஐதீகம். ஆனா இப்பெல்லாம் பிஞ்சிலயே எல்லாம் தரோ. அப்படி ஒருத்தி தான் மர்லின். ஒன்பதாம் வகுப்பில் கால்பதிக்கும் முன்பே பொழுதுபோக்கிற்காக அம்மாவின் போனை அடிக்கடி எடுத்ததுண்டு. ஆனால் அது படிப்பின் ஓட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

மர்லினின் அம்மா அப்பா இருவருமே ஆசிரியர்கள். இவள் அவர்களின் கடைக்குட்டி. ஆமா இவளுக்கு இரண்டு அக்காவும் இருந்தார்கள். மூத்தவள் பொறியியலாளர் , இரண்டாவது ஊடகவியலாளர். "அட இவளுக்கென்ன இவள ஒரு மருத்துவரா தான் பாப்பன்" என்று கனவு கண்ட அவள் பெற்றோருக்கு அடித்தது சூறாவளி.

நான் பேசப்போவது அன்றய கதையல்ல இன்றைய கதை. ஆம் கொரோனாவினால் சீர்குலைந்த இன்றைய நிலவரம். இன்றுடன் ஒன்றரை வயதாகிறது கொரோனா பிறந்து. எமது உற்சாகம் அடங்கி திசை குழைந்தும் ஒன்றரை வருடமே ஆகின்றது. அன்று போடப்பட்ட பூட்டு பயணத்திற்கு மட்டுமல்ல எம் கல்விக்கும் தான். மர்லின் உண்மையிலேயே கெட்டிக்காரி தான். அனைத்துப் பரீட்சையிலும் அனைவரையும் முந்திக் கொள்வாள். சகல விடயங்களையும் கச்சிதமாக கற்க வேண்டும் என்பது அவளின் திறமையின் அடையாளம். இதுவும் ஒருவேளை காரணமாக இருக்கலாம் அவளின் நிலமைக்கு.

கொரோனா கண்ணுக்கு தெரியாத கரையான். நான் அதன் இயல்பை ஒப்பிட்டேன் கரையானென்று. மொத்தமாக அரித்திற்று மர்லினின் வாழ்க்கையை. நாடு பூரா லாக்டவுன் என்ற அரசாங்க அறிவிப்பிலே தூரமிருந்த கைபேசி அவளை மெல்ல அணைத்திற்று. "இனியெல்லாமே ஆன்லைன்லதான். எகவுன்டுக்கு மணிய போடுங்க" என்று வந்த அழைப்பில் அவள் உற்சாகம் சிறிதே அடங்க அவசர அவசரமா "ஸ்ப்லென்டிட்" என்ற பேரிலெல்லாம் பல குருப்புகள் உருண்டன.

‘காலைல 9 மணிக்கு சாரதி மேடத்தின் ஆங்கில பாடம், ஷூம் ல பதிவிறக்குங்க’ னு குருப்பிலிருந்து வந்த மெசர்ச்சைப் பார்த்து அடுத்த நொடியே ஆயத்தமானாள். இப்படி ஆரம்பித்தது தான்......
இரண்டே மாதம் அவள் அவளது போனை படிப்போடு நிறுத்திக் கொண்டாள். தொடர்ந்தது லாக்டவுன், வீடென்பது அவளுக்கு எரிச்சலை ஏற்படுத்த பொழுதுபோக்கிற்காக யூட்யூபிலே ஒன்றிறெண்டு நகைச்சுவை வீடியோக்களை பார்த்தவள் தான், ம்ம்ம்.... அதுவே அவளுக்கு பழகிப்போனது. கற்பதை உடனே கற்று, வகுப்பையே உற்சாகப்படுத்திய அவள் இன்று பாடவேளையில் கூட வீடியோக்களில் கழித்தாள்.

"மர்லின்" வழமை போன்ற ஆசிரியர் ஒலி அன்று அவள் அமைதியில் குறைய ஆரம்பித்தது. இத்தனைக்கும் தான் பிள்ளை படிக்கிறாள் என்ற பெற்றோரின் எண்ணமும் தொடர்ந்து கொண்டே செல்கிறது. பாடல், குறும் படம், நெடும் படம், நகைச்சுவை, நாடகம் என சகலதும் கண்டு கழித்தாள். அவளை அறியாமலே அவள் பல ஆபாச காட்சிகளையும் சிறிதும் பதறாமல், வெட்கப்படாமல் ரசித்து மகிழ்ந்தாள். போனிலே அறியாத பல விடயங்களையும் தேடித் தேடி அறிந்து கொண்டாள். அவள் நிறுத்தவில்லை இன்ஸ்டாகிராம், மூவி எஃப், பேஸ்புக் என ஏராள எஃப் களையும் பதிவிறக்கிக் கொண்டாள். ஆரம்பத்தில் சிறிது தயங்கியவள் பின் அதற்கெல்லாம் பழக்கமானாள்.

"மகள் சாப்பிட வாமா, ஒரே படிப்பு என்று கஷ்டபடாத, கொஞ்சம் ரெஸ்டும் வேணும்" என்ற அம்மாவின் அழைப்பு இப்போது அவளுக்கு எரிச்சலை உண்டு பண்ணியது.

இன்ஸ்டாகிராம், பேஸ்புக் என எல்லாவற்றிலும் முதலில் கால், கைனு பதிவிட்டவள் பின் எவ்வித மறைப்பும் இன்றி அவள் முகத்தை பதிவிறக்கி மகிழ்ந்தாள். "டியர் நீங்க அழகா இருக்கிங்க" என பல ஆண்களின் வர்ணிப்பு அவளை பேரழகியாக்கிற்று. அவளைத் தேடித் தேடி பல ஆண்கள் ப்ரண்ட் ஆக்கிட்டதும் உண்டு. இது அவளை மேலும் தூண்ட அவளும் பலவிதமாக அவளை காட்சிப்படுத்தினாள். நாட்கள் உருண்டோட அவள் தரம் பத்திற்கு வகுப்பேற்றப்பட்டாள். மர்லின் நண்பிகளின் செல்லத்தோழி, ஆனால் இப்பெல்லாம் நண்பிகளுடன் கூட பேச்சில்லை. அதற்கு பதிலாக தன் மொத்த தகவலையும் பல ஆண்களுடன் பகிர்ந்து அவள் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. அன்று அவளுக்கு ஓர் தொலைபேசி அழைப்பு ஒலிக்க "ஹலோ நான் உங்க இன்ஸ்டாகிராம் நண்பன்" என்றதும் ஆரம்பத்தில் சிறிது தயங்கியவள் பின் மகிழ்ச்சியின் உச்சிக்கே சென்றுவிட்டாள். பேச்சும் தொடர்ந்தது. ஒரு நாளில் ஒரு நேரம் என்று ஆரம்பித்து நாள் முழுக்க என பேசிக்கொண்டே இருந்தனர்.
பாவம் அவள். அவள் அவனுக்கு எத்தனையாவது என்று அவனுக்கே தெரியாது. அவள் வாழ்க்கை மொத்தமாக அழிக்கப்பட்டது. அவள் பயன்படுத்தப்பட்டாள்.

தோட்டத்தில் அழகிய பூக்களை தடவியும் தடவாமலும் அதிலே உலாச் சென்ற வண்டுகளின் ரீங்காரத்தை இனிதே ரசித்து மகிழ்ந்த மர்லினின் தாய் "மர்லின் மர்லின்" என்ற அழைப்பிலே அறிந்து கொண்டார் அது அவளின் அதிபர் என. "வாங்க சேர், என்ன இந்த பக்கம்" என்று கேட்டும் கேட்காமலும் 'வேறெதெற்கு என் மகளின் திறமையை புகழத்தான்" என மனதில் எண்ணிக்கொண்டார். எண்ணிய எண்ணம் அவரில் நிலைக்கவில்லை. அங்கு அவருக்கு அதிர்ச்சி கொட்டிக் கிடந்தன. "அவளை படிப்ப விட்டு நிறுத்திட்டீங்களா?" என்ற அதிபரின் கோபம் நிறைந்த கேள்வியில் அவர் உறைந்தார். "எ.... ஏன்.... அப்ப... எதற்காக இப்படி கேட்கிறீங்க?" என்று எப்படியோ அவர் கேட்டுவிட்டார். "சரியா ஆறு மாசம் ஆகுது அவள் வகுப்புக்களுக்கு வந்து, அதற்கு முன்னமே அவள் எதையும் சரியாக செய்ததும் இல்லை, எங்கே அவள் என்ன ஆச்சி?" என தொடர்ந்தார் கேள்வியை.
"இப்ப கூட அவளுக்கு ஆன்லைனில் பரீட்சை நடக்குது. அதற்கும் அவள் இல்லை" மர்லினின் தாயின் கண்கள் குலமாக நிறைய "அ...வளும்" என்றதுடன் அவரால் பேசமுடியவில்லை.

"You also a good teacher. So watch your daughter, if not you will be loss her" என்று ஆங்கிலத்தில் சொல்லி மறைந்து விட்டார் அதிபர்.

இடியுடன் மழை தொடர்வதும் உண்டு. இங்கு அடைமழை ஓயாது பெய்ய காத்திருந்ததோ ஏனோ மர்லினின் தாய்க்கு தொடர்ந்தது பேரதிர்ச்சி. நடுவிலே மதில் பிரித்து நின்றும் பிறர் குறைக்கு காத்திருக்கும் அடுத்த வீட்டு றிஸ்மியா "தாத்தா, தாத்தா" என்று அவசர அவசரமாக செல்ஃபோனை தட்டிய படி ஓடி வந்தாள்.
நேர்ந்தது இன்னது என்று காட்டிக்கொள்ளக் கூடாதென்று தன்னை அமைதிப்படுத்தினாள் மர்லினின் தாய். "படார்" தூரத்தில் இருந்தும் கதிரை விழ ஓடி வந்த றிஸ்மியா "தாத்தா எப்படி சுகமா?" னு நக்கலாக கேட்டுவிட்டாள்.

"எனக்கு கொஞ்சம் வேள கிடக்கு, சுருக்கா சொல்லு" என அறைந்தால் போல கேள்வி எழுப்ப "என்னத்த சொல்ல, எப்படி சொல்ல, அதுவும் உங்க முகத்துல....." றிஸ்மியா அவள் நடிப்பை காட்டிவிட்டு தொடர்ந்தாள் வந்த வேலையை.
"நல்ல கெட்டிக்காரி, என் வளர்ப்பு என்று என்னவெல்லாம் சொல்வீங்க, இப்ப என்ன ஆச்சி அந்த வளர்ப்புக்கு" என றிஸ்மியாவின் பேச்சும் அதிகரித்தது. பாவம் உண்மை அறியா அந்த தாய் மர்லினை பற்றி பெரிதாகவே பேசினாள். றிஸ்மியாவை பாய்ந்து அறைய எத்தனிக்கும் போது றிஸ்மியா செல்ஃபோனை அவர் முன் நீட்டினாள்.

கண்கள் கண்ணீர் குலமாக, சரீரம் உறைந்து போனது மர்லினின் தாய்க்கு. எதுவுமே பேசாமல் அவர் தரையில் மாய்ந்தார். றிஸ்மியா பதறிப்போக இருந்த இடமில்லாமல் மறைந்தாள்.
வேறென்ன நடக்கும் இன்ஸ்டாகிராம், முகநூல் என அவள் போட்ட கூத்துக்களும், அவளது ஆபாச புகைப்படங்களும் மர்லினின் தாயை தூக்கி வாரிப்போடத்தானே செய்யும்.
"இன்றைக்கு மரை, என்ட மர்லினுக்கு பிடித்த கறி" என்று கூவிய வண்ணம் வந்த மர்லினின் தந்தை விழுந்து கிடந்த மனைவியைக் கண்டதும் பதறி ஓடினார் அவரருகில். பலமுறை அழைத்தும் பலன் கிட்டாததால் மருத்துவமனைக்கு அனுமதித்தார்.

இரண்டு மணித்தியால போராட்டத்தில் "ம்ஹ்ஹ்" என்ற பெருமூச்சுடன் அவள் உயிர் மீண்டது. கண்களில் கண்ணீர் நிறம்ப தன் கணவனிடம் நடந்தவற்றை கூறி அழ விரைத்துப் போனார்.
"இன்றைக்கு மரை, என்ட மர்லினுக்கு பிடித்த கறி" என்ற வார்த்தை அவருக்கு கசத்தது. கோபத்துடன் வீட்டுக்கு சென்ற அவர்கள் "மர்லின்" அவர்கள் குரல் கணத்தது, ஆனால் பதில் இல்லை. ஆத்திரம் மேலிட அறைக்கு சென்ற அவர்களுக்கு காத்திருந்த செய்தி, அவள் அவளையே மறந்து பைத்தியமானாள். அவள் ஏதோ பேசிக்கொண்டிருந்தாள். அவள் ஃபோனே அவர்களுக்கு நடந்ததை கூறிற்று. "மர்லின்.... மர்லின்...." மொத்தமாக அடங்கிற்று அச்சிறு பறவை. இருள் அவளை மட்டுமல்ல மொத்த குடும்பத்தையும் மூடியது.

**முற்றும்......**

**படிப்பினை**
**ஃபோனில் தான் படிப்பென்று அலட்சியமாக இருந்தால் எதுவும் நிகழலாம். இது பெற்றோருக்கான விழிப்பூட்டல் மட்டுமல்ல ஒவ்வொரு பெற்றோரின் கனவுளை காப்பது எமது கடமை என ஒவ்வொரு பிள்ளைகளையும் அறிவூட்டும் எனது உரை. எந்நிலையிலும் கல்வியை தொடர்வோம். முறையாக வாழக் கற்றுக் கொள்வோம்**

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

@skytamil.lk
மாதமிருமுறை | இதழ் - 12 | 5 ஆகஸ்ட் 2021

# இதயத்தளம் கவிதைகளின் களம்

ஹைக்கூ கவிதைகள்



மின்சாரத் தடை
ஆங்காங்கே தெரியும்
மங்கலான வெளிச்சம்.!

**ஷிஹானா மக்சூட்**
**அக்குறனை**



காட்டு மான்கள்
வீரியமாய் பாய்கின்றன
வேடனின் அம்புகள்.

**ஜ.எம். ஜெமீல்**
**தெல்தோட்டை**



ஓயாத அலை /
எழுந்து மீண்டும் விழுகிறது /
கடற்கரையில் விளையாடும் குழந்தை /

**ரியாஸ் மொஹமட்**
**தெல்தோட்டை**



நிலவு வெளிச்சத்தில் /
துள்ளி விளையாடும் மீன் /
ஏக்கத்துடன் பூனை /

**கனேஷ் ராஜ் ( லண்டன் )**



வனவியல் பூங்கா /
கருப்பு வெள்ளை நிறங்களில்/
வரிக்குதிரை/

**இரா.தேவி**
**வவுனியா**



விட்டு விட்டுச்சிரிக்கிறது
குழந்தை/
தென்றல் தீண்ட கிளையில் /
விளையாடும் நிலா /

**கவிமணி கவிநுட்பம்**



வேட்டைக்கு வந்த சிங்கம் /
விரட்டிக் கொண்டு போகும் /
எருமைக் கூட்டம்

**- மருதா சமத்**



சுவற்றில் தொங்கும்/
புகைப்படங்கள் அசைந்தபடி ஆடுகின்றன/
பழைய ஞாபகங்கள்/

**விகடகவி.**



கட்டியக் கதிர்கள்
சிதறாமல் இருக்கின்றன
நெல்மணிகள்/

**எஸ். செல்வி**
**கலஹா**



வெட்டிய மரங்கள்/
சாலையோரத்தில் விழுந்துக் கிடக்கின்றன/
குருவி குஞ்சுகள் /

**பி.கே.கலாவதி**
**மலேசியா**



மாலைச் சூரியன்/
விடைபெற்றுச் செல்கிறது/
கூட்டுக்குள் பறவை..!

**முகம்மது ஜாபீர்**
**மருதமுனை**



தொலை தொடர்பு /
மகிழ்வை தருகின்றது /
குழந்தை பிறந்த செய்தி /

**தாமரை. இரா. உதயநேசன் அமெரிக்கா**

# செங்காந்தள் மலர் தந்து அவன் சொன்ன காதல்



மினியன் ருக்கு..

செந்நிற வானம் அது ஓர் அழகிய மாலை நேரம்..
சாலையோரம் நான் நின்றிருக்க, தொலைவில்
அவன் நடந்து வந்தான்.

நேர்த்தியாய் உடை அணிந்திருந்தான், கண்கள்
அவன் திசை நோக்கிட, காரணம் அவனது உடை
நிறமாய் இருக்க வேண்டும்! ஆம்!
வெண்ணிறத்தில் காற்சட்டை, எனக்குப்பிடித்த
செந்நிறத்தில் மேற்சட்டை!
எனை நோக்கியே வருகிறான்..

அறிந்தும் அறியாததுபோல் நின்றிருந்தேன்!
கார்த்திகை மாதம் அது! கற்பனையிலும் கண்டிரா
காட்சிகள் அங்கே!
எதிர்பாரா விதமாய், சட்டென என் முன் வந்து
நின்றான்!
அச்சமும் நாணமும் கலந்திட, தலை தாழ்த்திக்
கொண்டேன், ஆம்!
என் எதிரே அறிமுகமில்லா ஆண்மகன் ஒருவன்!
என் பெயர் சொல்லி அழைக்க, நிமிர்ந்தேன்!

தாமதம் இன்றி அவனும் செங்காந்தள் மலர் நீட்ட,
வியப்போடு அவனை நோக்கி நின்றேன்!
ரசனையோடு மலரையும் பார்த்து நின்றேன்!
அழகிய தோற்றமது! அசத்தும் வர்ணமது!
அதுவரை கண்டிராத அற்புத மலரது..!
காதல் சொல்லத்தான் வந்திருக்கிறான், உள்ளம்
உணர்ந்து கொண்டது!
இது என்ன காதல் சொல்லும் புதியமுறை?!
வினாக்கள் தொடுத்து நின்றது!
காரணத்தை வினவி நின்றேன்! அடுக்கடுக்காய்
அவன் விளக்க, மெய்யாக சொக்கி நின்றேன்!

இந்த மலர்மேல் எனக்கு அலாதிப்பிரியம் என்றான்!
இதன் எழிலும் உன் அழகும் ஒன்றே என்றான்..
மனதுள் குதூகலம் அடைந்து நின்றேன்!
இதன் நிறங்களை உன்னிலும் நான் பார்க்கிறேன்
என்றான்! கோபத்தில் உன் கன்னம் போலிருக்கும்
அக்கினியில் நிறமும் இதிலடக்கம் என்றான்..!

வெட்கத்தில் மீண்டும் தலைகுனிந்தேன்!
இதன் இதழ்கள் ஐந்தும் உன் விரல்கள் என்றான்!
சற்று நேரம் உறைந்தே நின்றேன்!
இதில் ஊறிடும் தேனின் இனிமை உன் பேச்சிலும்
உள்ளது என்றான்!
மீண்டும் அங்கே மலைத்து நின்றேன்!
இம்மலரில் உள்ளது பிணிதீர்க்கும் குணம், அதுபோலவே
உன் அன்பான குணம்!
மொத்தத்தில் இம்மலரின் அழகும் குணமும்
உன்னைப்போலவே உள்ளது என்றான்!
உன் அன்பு தந்து என் நெஞ்சம் கொண்ட பிணி
தீர்த்திடுவாயா???
என்றான்!!

பிரம்மித்து நின்றேன்! சொல்லிமுடித்தே அழகாய்
புன்னகைத்தான்!
கைகளால் நானும் முகம் மறைத்தேன்!!
என்னுள் தோன்றிய உணர்வுகளை அவனும்
புரிந்துகொண்டான்!
பத்திரமாய் பார்த்துக்கொள் என் காதலை என்றான்!
கார்த்திகை மாதமிது!

நாட்காட்டியில் குறித்து விடு!
என்றவாரே மெதுவாய் நகர்ந்து சென்றான்,
அழகிய காந்தப் புன்னகையோடு!



# சீதனத்தின் சீர்கேடுகள்

ஹலாலான உன் மனைவியை
வாழ்நாள் துணையை பெற......
பெறலாமா நீ
ஹராமான கைக்கூலி.

சமுதாயக் கேடு சீதன சீர்கேடு
சீதன பேய்...
முதுகெலும்பு இல்லா
ஆண்மையின் இயலாமை.
மஹர் எனும் மணக்கொடை
ஆண்மையின் கௌரவம்

கைக்கூலி நீ பெற்றால்...
கேவலம் இழப்பாய் தன்மானம்.
நீயாக பெற்றாலும்
வற்புறுத்தலில் கேட்டாலும்..
ஹராம் என்பது
ஹலாலாக போவதில்லை

முதிர்கன்னிகளும்
ஏழைக்குமரிகளும்
இருட்டறையில் நாற்சுவருக்குள்ளே
கனவுகளை சுமந்தவர்களாக..
கண்ணீர் கடலில் தத்தளிப்பது
காணவில்லையே நீ...
கண்ணிருந்தும் குருடர்களாக...

சீர்கெட்ட சீதனம் சிறை
வைத்திருக்கிறது
சிங்கார பெண்களை
சிரிக்க முடியாமல் கண்ணீரை
மட்டுமே பரிசாகக் கொடுத்து.

நனவின் பசுமை
இளமையின் இனிமை
நிதர்சனமான நிகழ்வுகளை கட்டிப்போட்டு..கானல் நீரில்
தாகம் தீர்க்கும் கன்னிகள்
குளத்து நீர் வற்றும் வரை
காத்து நிற்கும் கொக்குகள்.

அறியாமையில்
பெற்றிருந்தாலும் அன்று...
திருப்பி கொடுத்திடு இன்று..
வழி காட்டுது மார்க்கம்

தொடராதே வழிகேட்டை...
வழிகாட்டு ஆண் மகனுக்கு..
நிமிர்ந்து நிற்கட்டும்
இளைய தலைமுறை.

பின்னாலிருந்து
தூண்டிடும் தாய்க்குலமே
வேண்டாம் கௌரவ பிச்சை..
தலைமுறை சொல்லும்
உன் மகனின் உறவே!!!
உணர்ந்திடு இதை
இருள் விலகட்டும்
கன்னியரின் வாழ்வில்..

**புதிய தென்றல்**
**ஜெய்னுலாப்தீன் ரிஸ்வானா**
**மடவளை பஸார் - கண்டி**

# கவிதை தலைப்பு தேடுகிறேன்



என்னில்
உன்னை அன்றி
எண்ண ஒன்றுமில்லை

கரு வானில்
கவரும் வண்ணம்
கர்வமாய் அமர்ந்திருக்கிறாய்

மாந்தரை நீ
கவர
காரணம்– நான்
கண்டறியலானேன்.

இவ்வுலகத்தவர்
உடனிருக்கும்
உறவுகளின்
அருமைகளை
உணர்வதில்லை
என்பதற்காகவா?

**கலேவெல**
**ஹம்ரா றியால்**



# விடைகொடு கொரோனா

கொள்ளை நோயாய் வந்ததே.
கொடுமை பலவும் செய்ததே.
கொரோனா கடும்பிணியதே.
கோரமாகப் பரவியதே.

கடுமையாகத் தொற்றியதே.
கதிகலங்கத் தாக்கியதே.
காலத்தை களவாடியதே
கள்ளமில்லா மக்களுயிர் காவு வாங்க
முந்தியதே.

சிந்தையை சிதைத்ததே.
சீக்கிரமாய் சில்லறையாய் சிதறியதே.
சீனாவிலே வித்திட்டதே.
சிறி லங்காவையும் இன்று ஆட்டிப் படைக்கிறதே.

பயந்து சாக வைக்குதே.
பாசத்தையும் பதுக்க நினைக்குதே.
விலகி ஓட மறுத்ததே.
விபரீதங்களை நிறைக்குதே.

வறுமையில் ஏழையை வாட்டுதே.
பணக்காரனையும் பதற வைத்து பார்க்குதே.
புதிய வடிவம் எடுக்குதே.
புலம்பி அழவும் தடுக்குதே.

குலுக்கும் கைகளை குற்றமாய் பார்க்குதே.
கூடும் இடங்களை குறி வைத்து அடிக்குதே.
இதயப் பரிவுகளையும் தூரமாக்கி வைத்ததே.
இறுதி கிரியைகளை இல்லாது அழித்ததே.

கடைசி காலமோ என்றெண்ண வைத்ததே.
கடந்து செல்லும் நிமிடத்தில் முள்ளாகத் தைத்ததே.
மனிதரைப் பார்த்து சிரிக்குதே.
மறைந்து வலையை விரிக்குதே

இருகரங்கள் இறைவனை நோக்கி உயருதே.
நெற்றியது சுஜூதில் பணியுதே.
நிவாரணம் தேடி உள்ளம் குமுறுதே.
நோய் தீர்த்தீடுவாய் அல்லாஹ் என் அருளாளனே.

**அப்துல் வாஹித்**
**பாதிமா முனீரா.**
**சில்மியா புர.**



# அப்பாவுக்காக...!!!

எனக்கு மட்டும்தான் தெரியும்
இன்று தந்தையர் தினம் என்பது
என் அப்பாவுக்கு
அது தெரியாது

எல்லா விசேட தினங்களுமே
இதயங்களை அலங்கரிப்பதை விட்டுவிட்டு
முகப்புத்தகத்தையும்
வலைத்தளங்களையும் தான்
அலங்கரிக்கின்றன

அம்மா இல்லா முகப்புத்தகத்தில்
அன்னையர் தின வாழ்த்துக்களும்
அப்பா இல்லாத வலைத்தளங்களில்
தந்தையர் தின வாழ்த்துக்களும்
வரிசையாய்
வந்து நிற்கின்றன

என் தந்தையர்தின
ஒரு வாழ்த்து கூட
அப்பா இல்லாத யாரையேனும்
காயப்படுத்தி விடுமே என்ற
அங்கலாய்ப்பில்
என் அப்பாவுக்கு வாழ்த்து
சொல்வதாய்கூறி
எந்த வலைத்தளத்திலும்
எதையும் நான் பதிவிடவேயில்லை

நான் இன்று
தந்தையர் தின வாழ்த்து சொல்லாவிட்டால்
வருத்தப்படாத என் தந்தை
வாழ்த்துச்சொன்னாலும்
ஒரு படி மேலாய்
சந்தோசப்படப்போவதில்லையென
எனக்குத் தெரியும்

ஆனாலும் நானறிவேன்
அப்பா இன்று மட்டுமல்ல
எந்நாளும்
கொண்டாடப்பட வேண்டியவர்

என்னைப்போலவே
என் அப்பாவுக்கும்
இந்த நாள்
அவ்வளவு பெரிய கொண்டாட்டமில்லை

இத்தனை காலமாய்
மண்வெட்டியோடு சேர்த்து
எங்கள் எல்லோரையும்
தன் தோளில் சுமக்கும் அப்பாவுக்கு
இந்த நாளும்
விடிந்தவுடன் மண்வெட்டியுடன் சென்று
இருண்டவுடன் வீட்டுக்கு வரும்
சராசரி நாள்தான்

கடந்த வருடம் மட்டும்
இறந்து போகாமல்
இன்றுவரை அவர்
உயிரோடு இருந்திருந்திருந்தால் கூட
வழமைபோல
காலையிலேயே மண்வெட்டியுடன்தான்
போயிருப்பார்

பாவம்...
வழமையாய் எல்லா
தந்தையர் தினத்திற்கும்
அப்பா இருப்பார்
ஆனால் இந்த வருடம்தான்.....!!!

நினைவுகளுடன்

**மடுல்சீமையூர் இரம்மியன்**




# தமிழ்நெஞ்சம்

## சிறு அறிமுகம்



பிரதம ஆசிரியராக
**அமின் மொஹமட்**

பிரான்ஸிலிருந்து மாதாந்த இதழாக மலர்ந்து மணம் பரப்பும் தமிழ்நெஞ்சம் பல்சுவை சஞ்சிகையானது, 1972 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தன் முதல் இதழுடன் முகிழ்த்தது. இதன் ஆரம்பகாலப் பயணம் கரடுமுரடாகக் கடினமாக இருந்தாலும், தமிழுக்காகச் செய்யவிழையும் பணியை, இன்றுவரை செவ்வனே செய்து வருகிறது. இதன் பிரதம ஆசிரியராக அமின் மொஹமட் அவர்களும், இணை ஆசிரியராக முனைவர் பெண்ணியம் செல்வகுமாரியும், நிர்வாக ஆசிரியராக சஃபி மொஹமட், மற்றும் ஆசிரியர் குழுவில் ஹிப்ஸ்ர் ரஹ்மான், கவிஞர் பாலமுனை பாறூக், கவிஞர் நெல்லை உலகம்மாள், பாவலர்மணி இராமவேல் முருகன், கவிஞர் தென்றல் கவி, வெண்பா வேந்தர் ஏடி வரதராசன். கவிஞர் அ.முத்துசாமி, கவிஞர் ஈழபாரதி ஆகியோரும், ஆலோசகர்களாக பாட்டரசர் கி.பாரதிதாசன், கவிதாயினி சக்தி ஜோதி ஆகியோரும் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள்.

இப்பல்சுவை இதழ் மரபு, புதுக்கவிதை, தன்முனை, ஹைக்கூ என பலதரப்பட்ட கவிவகைகளும், சிறப்பான கதைகளும், பயன் தரக்கூடிய பலவேறு வகையான கட்டுரைகளும், சிறப்பு மிக்க ஆளுமைகளின் நேர்காணல்களும் இன்னும் பல அம்சங்களும் இணைந்து பல்சுவை மணம் கமழ்கின்றது. இதன் வடிவமைப்பு பக்கத்திற்கு பக்கம் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களின் கைவண்ணத்தில் மிளிர்வதைக் காணலாம்.

இதன் பாரபட்சமற்ற சேவை, திறமையானவர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்துள்ளதுடன், இலைமறை காயாக இருக்கும் திறமை மிக்க படைப்பாளிகளை சமூகத்துக்கு அடையாளம் காட்டி ஊக்குவித்தும் வருவது சிறப்பானது.

இதன் ஆசிரியராகத் திகழும் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களின் தன்னலமற்ற தமிழ்ப்பற்று, தன் இதழில் வேடந்தாங்கலாய் எல்லோருக்கும் நிழல் தந்து அரவணைக்கிறது என்றால் அது மிகையல்ல.

இப்பத்திரிகையின் இணைய பயணம் 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பமாகி, இன்று வரை இணையத்தையும் கலக்கி வருகிறது.

இன்னும் சில மாதங்களில் தனது ஐம்பதாவது ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடவிருக்கும் இந்த சஞ்சிகையின் பிரதிகளை வாசிக்கவும், தரவிறக்கம் செய்து கொள்ளவும் http://tamilnenjam.com இற்கு விஜயம் செய்யலாம். அந்த இணையதளமும் திறமையான படைப்பாளிகளின் ஆக்கங்களாலும், புகழ்பெற்ற ஆளுமைகளின் நேர்காணல்களாலும் அழகுற மிளிர்கிறது.

இப்பத்திரிகையுடன் கரங்கோர்த்து பயணிக்க விரும்பும் அனைவரும் தமது படைப்புகளை, editor@tamilnenjam.com என்ற மின்னஞ்சல் அனுப்பி வைக்கலாம்.

தமிழ் இலக்கிய உலகில் ஐம்பதாண்டுகளாக வரலாறு படைத்து, உலகவாழ் தமிழ் வாசகர்களைத் தன்பக்கம் ஈர்த்து வைத்துள்ள தமிழ்நெஞ்சம் இதழுக்கும், ஆசிரியருக்கும், அதன் நிர்வாகக் குழுவினருக்கும் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளைப் பூச்செண்டாக நல்குவதில் மகிழ்ச்சியடைகிறோம்.





# தெரு நாய்கள்

## கீதா மோகன்

**இந்தியா**

அந்தச் சாலைவழியாக அடிக்கடி போவாள்
வருவாள்–
நாளொரு தடவை செல்வியைக் கண்பார்த்தால்தான்
விடிகிறது இவள் உலகம்....

செழிப்பான குடும்பத்தில் செழுமையான
வாழ்க்கைதான் செல்விக்கு– மிடுக்கான
அவளாடையும் துடுக்கான கண்ஜாடையும் தாடையில்
விரல் வைத்து ரசிக்கச் சொல்கின்றன...

தூரத்தில் இருந்தே கண்களால் தூக்கி வைத்துக்
கொஞ்சுகிறாள்– இறுக்கியணைத்து இதயத்துடிப்பறிய
இதுவரை கொடுத்து வைக்கவில்லை சுந்தரிக்கு.....

சாலையின் மறுகரை மறைவாக நின்று பார்த்து விட்டு
விரைவாகத் திரும்பிவிடு –இவ்வளவுதான்
வீட்டம்மாவின் தயாளகுணம்....

தாயாகும் பேறு பெறாதவளிடமும் தாய்மைக்குணம்
இருக்க வேண்டும் என எதிர்பார்த்திட முடியாதுதான்...
புரியாதவளல்ல சுந்தரி– சேலைத்தலைப்பை வாய்
சொருகி முக்காடிட்டுக் குடை பிடித்து மறைந்து நின்று
தன் செல்ல மகளின் குதியாட்டம் கண்டு மனதுக்குள்
குதூகலித்துச் சிரிக்கிறாள்...

திண்ணை மேலிருந்து பாய்ந்து பூனைக்குட்டி
விரட்டுகிறாள் செல்வி – காலிடையே உடலுரசும்
பூனைக்குட்டி...
தூக்கி வைத்து முத்தமிட்டு தூரம் சென்று வட்டமிட்டு
தாவித் திரிகிறாள் செல்வி...
முற்றம் முழுதும் இரைந்து கிடக்கும் வெளிநாட்டு
பொம்மைகளின் நடுவில் இவளும் ஒரு
பொம்மையாக...

சுந்தரியின் பெருமூச்சு காற்றில் பெருங்கதை
அவிழ்க்கிறது...

தன்னுடன் இருந்தால் ஒருவேளைக் கஞ்சிதான்
கிடைத்திருக்கும் – அப்பாடா எனும் நிம்மதிப்
பெருமூச்சா ....?

தன்னுடலின் சதையின் ஒருதுண்டு தன்னிடமும்
வலமும் பாலுண்டு – கண்ணோடு கண் கண்டு
சிரித்துக் கிடந்த அவளின்று கண் முன் நின்றும்
கைதூக்கி கொஞ்ச இயலவில்லையே எனும் ஏக்கப்
பெருமூச்சா ...?

முற்றத்தில் வேறு யாரும் இல்லை என
உறுதிப்படுத்தியவள் ஏதோ நினைத்தவளாய் சாலை
எட்டிக் கடக்கிறாள்– வாயில் புகத் துணிகிறாள்...

செல்வியை நெருங்கிச் சென்று தூக்க விழைந்தவள்
காலைக் கவ்வுகிறது அரக்க நாயொன்று – சேலை
இழுத்துக் கிழிக்க....

சாலை வெளியே ஓடித் தொலைகிறாள்....
கன்னம் வழியே கோளக் கண்ணீர் வெடித்துக் கோடு
கிழிக்கிறது..... விம்மி அழுது மெல்ல நடந்து வீடு
வந்தாள்...
கிழிந்த சேலையும் நொண்டும் காலையும் கண்டும்
காணாத கணவன் “ஊறுகாய் எங்கே வைத்தாய்?“

என கூந்தல் இழுத்துச் சுவற்றில் பதிக்கிறான்...
இரு நாய்களும் தெருநாய்கள்தான் .....



# அம்மா!!

மாா....
மறக்க முடியாத காவியம் நீயே!!!!
மறுக்க முடியாது பொக்கிஷமும் நீயே!!!!

அம்மா...
அன்பேனும் மூன்றேழுத்திற்கு
உதாரணமும் நீயே!!!!
காதலேனும் மூன்றேழுத்திற்கு
உயிரும் நீயே!!!!

10 மாதம் சுமந்து முடிந்தாலும்,
10 நிமிடம் கூட நெஞ்சில் சுமக்காமல்
இல்லை......

அம்மா....
நெஞ்சோடு அணைத்து
பாசமழை பொழிந்தாயே!!!
கண்மூடும் நேரமெல்லாம்
என்னை மட்டும் நினைத்தாயே!!!!

கனவில் கூட என் எண்ணம்
அடிக்கடி அறை வந்து என்னை பார்க்காமல்

நீ இல்லை.....
மறுக்கத்தான் முடியுமோ உன்
ஏச்சுப்பேச்சுக்களை.....
அது கூட சில நேரம்
இனிமையாகத்தான் இருக்கும்....

அம்மா...
ஒன்றை மட்டும் இறுதியாக கூறுகிறேன்,
என்றென்றும் பிரிந்து விடாதே,
நான் கண் மூடும் முதல்.......!!!!

காரணம் யார் என்னை விட்டு
பிரிந்தாலும் பரவாயில்லை.....
உன்னை இழக்க என் மனம்
தாங்காத பெண்ணே!!!!!

பிரிந்து விடாதே!!!!

**பாத்திமா பின்த் சம்சுதீன்**
**சாய்ந்தமருது**



# நிழல்

நிழலை யாரும் திரும்பிப் பார்த்து
புன்னகைத்திருக்கிறோமா.
நிழலைத்
திறந்து பார்ப்பவன்
முதலில் மனிதனே

நிழலின் குரல் வளையை
யாரும் நசுக்குவதில்லை

பாதை தவறி
நிழல் ஒருபோதும்
நகர்வதுமில்லை

சுயநலம் இல்லாமல்
நம் கூடவே வருவது
நிழல்தான்

மனித உருவில்
இன்னுமொரு உயிர்
நமது நிழல்

தெருவோரம் நிழல்
அது அழகிய நமது குடிசை

நிழலைத் தேடியபடி
நடந்து கொண்டிருக்கிறேன்
என்னைத்
துரத்திக் கொண்டிருக்கிறது
வெயில்

**மருதமுனை விஜிலி**

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வரை நெஞ்சங்கள்







# சாய்ந்தமருது இளைஞனின் ஓவியத் திறமை பற்றிய ஓர் அலசல்

ஓவியத் திறமை என்பது எல்லோருக்கும் கிடைக்கும் திறமை அல்ல. அதேபோன்று ஓவியர்கள் எல்லோருமே ஒரு தத்ரூபமான சிறப்பான ஓவியத்தை கொடுத்து விட முடியாது. சிலராலேயே இவ்வாறான ஓவியங்களை வரைய முடியும். அந்த சிலரில் ஒருவராக அம்பாறை மாவட்டத்தில் "சாய்ந்தமருது" பிரதேசத்தில் வசிக்கும் அப்துல் றஹீம் முஹம்மது ஹாதி சிறந்த ஓவியராக வளர்ந்து கொண்டு வருகிறார். தனது ஆரம்பக் கல்வியை சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள அல் – ஹிலால் பாடசாலையிலும் பின் ஸாஹிறா தேசிய பாடசாலையிலும் உயர்தரத்தினை கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலையிலும் கற்றார்.

தனது சிறந்த பெறுபேற்றின் மூலம் உயர்தரத்தில் சித்தி பெற்று யாழ் பல்கலைக்கழகத்திற்கு (சித்திரமும் வடிவமைப்பும்) தெரிவு செய்யப்பட்டார்.

பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகுவதயே தன்னுடைய விருப்பமாகவும் இலக்காகவும் கொண்டிருந்தார். கலைத் துறையில் எந்த வித பின்புலமும் இல்லாத ஹாதி தனது சுய முயற்சியும் கலை மீதுள்ள அதீத ஆர்வமும் இவரை ஒரு சிறந்த ஓவியராகச் செதுக்கியது.

ஹாதி பாடசாலையில் கல்வி கற்கும் போதிலிருந்தே சித்திரம் வரைவதில் தான் அதிக நாட்டமும் ஈடுபாடும் கொண்டிருந்தார். சித்திர பாட ஆசிரியர்களைத் தன்னுடைய முன்னுதாரனமாக எடுத்துக் கொண்டார். தான் படைப்பாளன் என்பதை விட கலைப் படைப்புகளை ரசிக்கும் ஓர் நல்ல ரசிகனாகவே இருக்கிறார். ஒன்றை ரசிக்கும் பழக்கமே ஒருவரை கலைஞனாக்கும் அடித்தளம் என்பதற்கு ஹாதி சிறந்த உதாரணம்.
ஆரம்பத்தில் கடற்கரை காட்சி, நீரருவி, மாட்டுவண்டி சவாரி, வயல் காட்சி குளத்தில் விளையாடும் சிறுவர்கள், காடுகள், மலைகள் போன்ற பல விதமான நிலக்காட்சிகள் போன்ற சிறு சித்திரங்களை வரையத்தொடங்கினார். இவ்வாறான சித்திரங்கள் ஹாதியின் பாடசாலை மட்டங்களில் நடைபெறும் சிறு சிறு போட்டிகளிலும் வெற்றி பெற உதவியது. இதுவும் ஹாதி ஓவியத் துறைக்குள் தூண்டப்பட்டதற்கு ஒரு திருப்புமுனையாக அமைகிறது. மேலும் அவரை இது அடுத்த கட்ட நகர்வுக்குள்ளும் இட்டுச் சென்றது.


க.பொ.த உயர்தரம் முடிந்த பிறகு தனது முழு நேர வேலையாக ஓவியம் வரைவதிலேயே கவனம் செலுத்தினார். ஆரம்பத்தில் பாடசாலை சுவர்களிலும் வீட்டு சுவர்கள் போன்ற பல இடங்களில் ஓவியங்களை வரையத் தொடங்கினார். பாரிய சுவர்களில் தான் தனியாகவே ஓவியங்களை வரைந்தார். சில பாடசாலைகளில் மாதக்கணக்கில் ஓவியங்களை வரைந்துள்ளார். (நிந்தவூர் அல் – மினா நிந்தவூர் அறபா வித்தியாலயம், நிந்தவூர் பிரதேசம் மற்றும் சாய்ந்தமருது பிரதேசம் 6–7). எல்லா இடங்களுக்கும் சைக்கிளில் சென்றே ஓவியம் வரைந்த இவர் ஆரம்பத்தில் காசுக்காக ஓவியம் வரையும் ஒரு கலைஞனாக இருக்கவில்லை.

தன்னை ஒரு நிலைக்கு கொண்டு செல்லவும் பாரிய வேலைகளை தனியே எடுத்துச் செய்யக் கூடிய ஒரு திறமையை வளர்ப்பதற்காகவும் இந்த வாய்ப்புக்களை ஒரு தளமாகப் பயன்படுத்திக் கொண்டார். மேலும் தான் ஓவியம் வரைந்த அந்த பாடசாலைகளின் உதவியுடன் சிறு சிறு கண்காட்சிகளையும் நடாத்தினார். இவ்வாறான பல வழிகளினூடாக தான் ஆரம்பத்தில் தன்னுடைய படைப்புகளை மற்றவர்களிடம் மற்றும் சமூகத்துக்கு கொண்டு சேர்த்தார்.

பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி யாழ்ப்பாணத்திற்கு சென்ற பின்பும் அங்கு தான் படித்துக்கொண்டிருக்கும் போதே நேரம் கிடைக்கும் போதெல்லாம் பல ஓவியங்களை வரைந்தார். அவ்வாறு வரையும் ஓவியங்களை தனது சமூக வலைத்தளங்களில் பதிவேற்றத் தொடங்கினார்.



இதன் மூலம் சமூக வலைத்தள பயனாளர்கள் மத்தியில் ஹாதிக்கு நல்ல வரவேற்பையும் ரசிகர்களையும் பெற்றுத் தந்தது. இவ் வரவேற்பு சமூக வலைத்தளங்களினூடாக பலர் இவரை தொடர்பு கொண்டு ஓடர்களுக்கு ஓவியம் வரைந்து தருமாறு கேட்கும் அளவிற்கு மாற்றியது. அதிலும் முக்கியமாக இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் நபர்கள் கூட இவரின் ஓவியங்களை ரசிப்பவர்களாகவும் அவற்றை வாங்குபவர்களாகவும் இருக்கின்றனர். குறிப்பாக ஜேர்மன், இந்தியா, லண்டன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, டென்மார்க் மற்றும் சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் வசிப்பவர்களுக்கு இவருடைய ஓவியங்களை விற்கும் அளவிற்கு சிறந்த ஓவியராகத் வளர்ந்து வந்துள்ளார்கள். மேலும் அண்மையில் இலங்கையின் மூத்த கலைஞர் ஒருவர் இவரைத் தொடர்பு கொண்டு இவர் பல்கலைக்கழகத்தில் வரைந்த 5 ஓவியங்களை அவரின் உதவியோடு அமெரிக்காவிலுள்ள ஒரு கலைக்கூடத்திற்கு விற்றுள்ளார்.






ஆரம்பத்தில் ஒரு சாதாரண படைப்பாளனாக மாத்திரம் இருந்த இவர் தற்போது ஏனைய நாடுகளுக்கும் தனது படைப்புகளை விற்பனை செய்யும் அளவிற்கு வளர்ந்துள்ளார் என்றால் நிச்சயம் இது இவரது திறமைக்கும் முயற்சிக்கும் கிடைத்த வெற்றி என்றே கூற வேண்டும். முதல் ஒரு கலைஞன் சிறந்த ரசிகனாக இருக்க வேண்டும் என்பதற்கும், தனது திறமையை மற்றவர்களுக்கு வெளிக்காட்ட ஒரு களத்தை அமைத்து அந்த வாய்ப்பை சிறந்த முறையில் எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்கும் ஹாதி ஒரு சிறந்த உதாரணமாக இருக்கிறார். இவர் மென்மேலும் வளர்ந்து ஒரு பிரபல்யமான ஓவியராகத் திகழ வாழ்த்துக்கள்.





தொகுப்பு:
**ஜே.எம்.பாஸித்**









# ஓர் இறப்பின் தொடக்கங்கள்

றுஸ்தா சிறாஜுடீன்
நற்பிட்டிமுனை

மிகமிகப் பரீட்சயமான
பெண்ணொருத்தி
எதிர்பாராமல் இறந்திடுகிறாள்..

அவளின்
உயிரின் கடைசி மூச்சை
இந்த பூமிக்காற்றில் கலந்துவிட்டு
தானும்
தன்னுயிரும்
தன் இறுதிநாளின் தேவைகளையும்
சுமந்துகொண்டு...
அவளது உடலை
இங்கேயே விட்டுவிட்டு
எனக்கு
மிகமிகப் பரீட்சயமான பெண்ணொருத்தி
இறந்துவிடுகிறாள்...

அவள்..
வாழ்க்கையின் அத்தனை
சந்தோஷங்களையும் மொத்தமாய்
இழந்ததாயெண்ணி
அழுதுதீர்க்கும்
மகளொருத்தியின்
தாயாக இருக்கலாம்...
போலும்
அமர்ந்திருக்கும் அத்தனை ஆண்களிலும்
வெறும் ஜடமாக அலைந்துதிரியும்
ஒரு ஆணின்
துணைவியாக...

அவள்..
தன் சுகதுக்கங்களை கைபிடித்துப்
பரிமாற
உரிமையோடு சண்டைபிடிக்க
ஓர்வீட்டில் கூடிமகிழ
ஒருறவு நீங்கியதை
நினைத்துக்கதறும் குரல்களின்
சகோதரியாக இருக்கலாம்..
போலும்
பழமைக்கால நினைத்தல்களில்
அவளைக்கழித்துப் பேசிடவொண்ணா
நிலையில்
கதறும் உறவினத்துப்
பெண்ணொருத்தியாக...

அவள்...
தன் பதின்மத்துப் பள்ளி தொட்டு
பதவிவரை கூடவந்த
நினைவுகளை எண்ணி
சுவரோடு சாய்ந்து கண்ணீர்வடிக்கும்
ஒருபெண்ணின் தோழியாக இருக்கலாம்..
போலும்
தன் பள்ளிநாட்களில் நன்கு
விரும்பப்பட்ட–ஒரு
ஆசிரியையாக....

அத்தனை பேரின்
மொத்தக் கவலைகளையும்
நிச்சயமாய் அவளின் ஆன்மா
பாராமல் இருந்துவிடப்போவதில்லை..
அதுபோலும்
இவர்களில் எவரும் அவளை
நாளை
சந்திக்காமல் இங்கேயே
இருந்திடப்போவதுமில்லை....

நானாய்...
என்னோடு மூத்தவளாய்..
என் சக வயதொருத்தியாய்..
என்னிலும் இளமையானவளாய்..
அவளாய்..
அவனாய்..
எதுவாயிடினும்–நாளை
மூச்சுக்காற்றை நுரையீரல்
வெளித்தள்ளும்போதுகளில்
மீண்டும் உடல்வந்து சேராமல்
காற்றானது
அண்டவெளியிலேயே
தஞ்சம்தேடிடும்போது....
அவளுக்கு நேர்ந்ததுபோலும்தான்
முறையே–அனைத்தும்
மேற்சொன்ன அனைவருக்கும்
நேர்ந்திடப்போகிறது......

எது
எவ்வாறாயிடினும்....
இந்நாட்களில்
எதுவும்
எதிர்பார்ப்போடு நிகழ்ந்திடுவதில்லை
என்பதை,
எனக்கு
மிகமிகப் பரீட்சயமான பெண்ணொருத்தி
அழுத்தமாய்
காதில் கூவிவிட்டாற்போலேயே
இறந்துவிட்டிருந்தாள்.

# வாழ்க்கை

மௌனங்களோடு உறவாடும் போது
காயங்கள் மௌனமாகும்.

கனவுகளோடு பயணிக்கும் போது
நனவுகளும் கனவுகளாகும்.

காயங்களோடு கடந்து போகும் போது
காயங்களும் மாயமாகும்.

சுகங்களோடு காத்திருக்கும் போது
யுகங்கள் பல சுகங்களாகும்.

ஏக்கங்களோடு போராடும் போது
நோக்கங்கள் எல்லாம் ஏக்கங்களாகும்.

அலட்சியங்களோடு கடக்கும் போது
இலட்சியங்கள் அலட்சியமாகும்.

தொடக்கங்களோடு வாழ்கின்ற போது
முடக்கங்களும் வெற்றியின்
தொடக்கங்களாகும்...

**ஆர். எப் மதீரா**
பதுளை
தென்கிழக்கு பல்கலைக்கழகம்-ஒலுவில்



# நீ விடியலின் விரல்கள்



நீ நேற்றைய
பிரசவத்தில் குழந்தை
இன்றைய தீர்மானங்களின் சக்தி
கறைபடிந்த கோடுகளை –உன்

நெற்றி சுருக்கத்திலிருந்து அகற்றிவிடு
அலைகள் இடிக்கு பயந்தவையல்ல
மின்னலின் ஆக்ரோஷத்தால்
பூமி பிளந்து விடுவதில்லை

நிறமில்லாத வானவில் –உன்
கண்களுக்கு சூனியம்தான்
எப்போதும் தேவதைகளின்
இறக்கைகளில்

தூங்கும் கனவை மறந்துவிடு
நீ கனவுகளுடன் மட்டுமே
பேசுவதனால்தான்
மேகங்கள் மெதுவாக

நகர்ந்துகொண்டிருக்கின்றன
விடியலின் விரல்களை
விட்டுவிடாதே
உனக்காக இன்னுமொரு

வானத்தை எழுதிச்செல்லும்
நீ உன் இலக்குகளுக்காக
விழிகளை விற்றால் –இந்த
பிரபஞ்சம் உனக்கு
பார்வையை தரும்

**பாத்திமா நளீரா**
**கொழும்பு**



# நீங்காத் துன்பம்

வாட்டும் வறுமை தீரவில்லை
வாய்த்த வசதி எதுவுமில்லை
வாழ்க்கை வாழ வழியுமில்லை
வழுக்கும் பாதை முடியவில்லை

இணையக் கல்வியில் இணையவில்லை
இதற்கு வறுமை
விடவுமில்லை
இழந்த பாடம்
மீட்டவில்லை
இருந்தும் கற்க இளைக்கவில்லை

தொலைந்த சுகங்கள்
மறக்கவில்லை
அலைந்த பாதை
முடியவில்லை
கலைந்த கனவுகள்
என்னிடமில்லை
சிதைந்த உள்ளம்
சீராகவில்லை

தேடிய செல்வம்
கிடைத்திடவில்லை
நாடிய சொந்தம்
உதவிடவில்லை
வாடிய எமக்கு
துணையிங்கில்லை
நீடிய துன்பம்
நீங்கிடவில்லை



**எம்.எச்.எம்.மின்ஹாஜ்**
**மதுராப்புர, வெலிகம.**

# பெண் விடுதலை




காலம் ஆனாது மின்னல் வேகம் கொண்டு யுகங்களாகச் சுழன்றாலும், அதைக் காட்டும் கடிகார முட்கள் தேங்கியிருப்பது ஒரு வட்டத்திற்குள்தான். மகள், மனைவி, அம்மா, பாட்டி என வெவ்வேறு பரிமாணங்களில் ஒரு பெண் தன் முக்கியத்துவத்தை உணர்த்தினாலும், அவள் முடங்கிக்கிடப்பது குடும்பப் பொறுப்பு, குடும்ப கௌரவம் என்ற பெயர்களில் ஆண்களின் அதிகாரங்களுக்குள்தான்.

ஒரு பெண்ணின் வெற்றிக்கு, ஆண் துணையாக நிற்கலாம். ஆனால், ஒரு பெண்ணின் வெற்றி எதைச் சார்ந்து இருக்க வேண்டும் என்பதே, அவள் ஏதோ ஓர் ஆணால் தான் தீர்மானிக்கப்படுகிறது. என்பதுதான் பெண்ணினத்தின் சாபம். பெண் சுதந்திரம் என்பது விக்கிரமாதித்தன் கதைகளில் வருவதுபோன்று ஏழு கடலுக்கு அப்பால் உள்ள கிளியின் உயிரில் பூட்டிவைக்கப்படவில்லை. நண்பன், தந்தை, சகோதரன், கணவன், சக பணியாளர், மகன் எனப் பெண்கள் கூடவே பயணிக்கும் ஆண்கள் கையில் சிக்கிய பட்டாம்பூச்சியின் சிறகுகளாகத்தான் அது துடிதுடித்துக்கொண்டிருக்கிறது.

100 ஆண்கள் வெற்றியடைந்தால், ஒரு பெண் வெற்றியடைகிறாள். சில துறைகளில் இந்த சதவீதம் ஆனது இன்னும் கொஞ்சம் அதிகமாக இருக்கலாம். என்றாலும், மொத்தத்தில் பெண்களின் வெற்றி சதவீதம் இங்கு குறைவுதான். அதற்காக, ஆண்கள் அளவுக்கு பெண்களுக்குத் திறமை இல்லை என்றா நினைக்கிறீர்கள்? நூற்றில் ஒரு பெண்ணுக்குத்தான், விரும்பிய துறையை, வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் கிடைக்கிறது என்பதுதான் உண்மையான காரணம், துயரமான நிதர்சனம்.....

**பாத்திமா நிஸ்லா**
**வியாங்கல்லை**

# பட்டினியாய்



பிச்சை எடுப்பதில் பிஞ்சு மனம் பஞ்சாய்
பறக்குது பத்து ரூபா காசுக்கு பட்டினியாய்
கிடக்குது பாவம் என்ன செஞ்ச பாவி
கொரோனா உயிர கேக்குது

பாதகத்தி நான் புள்ளக்கு பசி தீர்க்க
முடியாம ஒடிந்து போய் கிடக்கேன் பஞ்சம்
என்ன இழுக்குது உயிரும் மெல்ல கழுத்த
நெருக்குது என் மனசோ புள்ள நெனப்புல
வாடுது

சொத்து சுகம் சேர்க்கல்ல சொந்த வந்தமும்
கூட இல்ல பித்து பிடித்து தெரிஞ்சேன்
சோத்து பருக்க தேடி பறந்தேன்

என் காலும் என்னை இளக்காரமா
பார்க்குது
என் வாயும் அகங்காரமா பேசுது

கனகாட்டு படுத்தும்
என் புள்ளக்கு பசி தீர்க்க
முடியாம உயிர் துறக்கே
போறேனே – கொரோனா
உன்னாலே என் புள்ளயே
பிரிய போறேனே

கேற்பார் யாரும் இல்லாத இந்த
அனாதை என் புள்ளைக்கும் அதேதான்
பரிசாக கொடுக்கேனே

என் உயிரும்
காற்றோடு கலக்குது
என் சருகும் மண்ணோடு மக்குது

**முபீத்**
**சாய்ந்தமருது**



# எம்.எச்.எம் அஷ்ரப்

இந்து சமுத்திரத்தின் முத்தான...
மாணிக்க தீவின் சுடராய் ஜொலித்த...
கிழக்கின் சூரியன்...
அஷ்ரபே... எங்கள் அஷ்ரப்...!!!

மதீனா உம்மா பெற்றெடுத்த...
பூமி அவதரித்த அவதாரமாய்...
விண்ணில் ஜொலித்த தாரகை...
அஷ்ரபே... எங்கள் அஷ்ரப்

சட்டக் கல்லூரியில் கற்கையிலே...
வந்ததுவே அரசியல் நாட்டம்...
தொடர்ந்தனவே செல்வநாயகத்தை...
அரிசியல் குருவாக...
ஆனாரே எமக்கான தலைவராக...!!!

ரயில் பயணம் செய்தாயே..
விழுந்தாயே காதலில்...
கண்டவுடன் காதலா???
இல்லை
காதலினும் காதலா???
நானறியேன்....!!!!
கரம் பிடித்தாயே பேரியல் இஸ்மாயிலை...
தொடர்ந்தாயே வாழ்க்கை துணையாக...!!!

ஒதுக்கப்பட்ட மக்களுக்குள் மலர்ந்த மாணிக்கமே...
சம்மாந்துறையில் பிறந்து
சகல குடிகளையும் அரவணைத்துச் சென்றாயே...!!!

உனக்கு உண்டோ ஈடு...
அதை உணர்ந்திடுமோ...
இந் நாடு...!!!

சிறுபான்மை இனத்தின் தனித்துவமான குரலானாய்...
இதனாலே
ஒதுக்கப்பட்ட மக்களின் தலைவரானாய்...
அரசியல் சட்டம் இயற்றிய புதல்வரானாய்...
தாழ்த்தப்பட்ட இனத்தின் உறவானாய்...
தேசிய காங்கிரஸிற்கு தலைவரானாய்...!!!

போராட்டங்கள் பல கண்டாய்...
இயக்கங்கள் சில கொண்டாய்...
விவாதங்கள் பல புரிந்தாய்...
காங்கிரஸில் நீ இருந்தாய்...
மக்கள் பணி செய்து வாழ்ந்து வந்தாய்...!!!

சிறுபான்மை இனத்தின் அடிமை சங்கிலியை உடைத்தவர்....
எமக்கான பாராளுமன்ற உறுப்பினராக வலம் வந்தவர்....
தலைமைத்துவத்தையே மாற்றிய உன்னத தலைவர்...!!!

சட்டத்தரணியாக ஜொலித்தவர்...
கல்வி என்ற சொல்லுக்கே கண்ணியம் செய்தவர்...
தென் கிழக்கு பல்கலைகழகத்தையே உருவாக்கியவர்...!!!

உரிமைக்காக குரல் கொடுத்தவர்...
நாட்டில் தொழில் பெருக நல்ல திட்டம் தீட்டியவர்...
ஆற்றின் குறுக்கே அணைகட்டி...
துறைமுகங்களை ஏற்றம் பெற வழி காட்டியவர்...!!!

அரசியலில் நீ செய்தாய் புதிய சாசனம்...
வரைந்தாயே
இலங்கைக்கான சட்டமூலத்தை...
வென்றாயே
பல கோடி மக்களின் உள்ளமதை...!!!

படிமம் காட்டும் சுடரொளி...
நீ
பேச்சாளன்...
எழுத்தாளன்...
கவிஞன்...
எமக்கான தலைவனும் நீ...!!!

நான் எனும் நீயை எழுதியவனும் நீ...
அதை எமக்காக விட்டுச் சென்றவனும் நீ...!!!

நிலவரங்களுக்கு ஏற்ப செயற்பட்டவனும் நீ...
நிமிட முள்ளாய் எம்மை காத்தவனும் நீ...

எமக்கானவாய் இருந்தவனும் நீ...
எம்மை விட்டுச் சென்றவனும் நீ...

நீ இலங்கை அரசியலில்...
வானில் மின்னிய தாரகை...
மர்மமான ஒரு விமான வெடிப்பால் அழிந்து போனது...
அத் தாரகை...

வரவேற்பதற்கு  வீதியில் கட்டிய தோரணம் எல்லாம்...
கழுத்தில் மாலையாய் தொங்கும் என்று அப்போது யாரும்
நினைத்திருக்கவில்லை...!!!

சத்தியத்தை நெஞ்சில் கொண்டு...
நம்பிக்கையை மனதில் விதைத்து...
சிறுபான்மை மக்களின் மூச்சுக்கு...
உன் பேச்சை மட்டுமா அடக்கினாய்...
தன் மூச்சையும் அடக்கிய...
அஷ்ரபே...!!!

அரசியல் தந்த உன் நினைவு அழியாமல் கனக்கிறது...
அரசியலை தாண்டி நீ செய்த சேவை இன்னும் மனதிலே
வாழ்கிறது...!!!

சிங்கத்தின் கர்ஜனையாலே காடுகள் கம்பீரம் பெறுகிறது...
இதனை அநேகமாக சிங்கங்களின் இழப்பே
புரியவைக்கிறது...!!!

மறைந்தும் மறையாத மா மனிதனே...
ஜன்னதுல் பிர்தவுஸ் எனும் சுவனம் உனக்கு கிடைக்க...
வல்ல இறைவனை பிராத்தித்தவளாக...!!!

**மொஹமட் நிசாம் பாத்திமா றிப்லா**
**வியங்கல்லை**

# அச்சம் என்பது மடமை அல்ல



அறிவும்,உடலும், புலனும் புலமையும்
வழங்கப்பட்டிருப்பது கூட நமக்கு ஒரு சோதனையே.

எம் நெறிமுறைகள் தான் இவற்றை
கையாளுகின்றன.
கையாளப்படும் முறை தான் எம் நெறிமுறைகளாக
ஆகிவிடுகின்றன.

ஏதோ ஒன்றில் சிறந்தவன் எதையோ ஒன்றை
இழக்கத்தான் வேண்டும்.
இது இயற்கை.
ஆனால்
எல்லாவற்றிலுமே
சிறந்தவனாயினும் கூட, அவன்
இழக்கக் கூடாத, தவறக்கூடாத
ஒன்று இருக்கிறது.
அதுதான் அழகிய மார்க்கம்.
அது பற்றிய தெளிவு,
அதன் வரலாறு ,
அது காட்டித்தந்தது,
அதன் எல்லாமே..

நாளைய கேள்விகளுக்கு
இன்றைய எம் தயார்படுத்தல்கள்
எந்த அளவிற்கு இருக்கின்றன?
என்பதனை,
எந்த அளவிற்கு நாம் எம்மை தயார்படுத்தி
வைத்திருக்கின்றோம்?
அதில் எந்த அளவிற்கு எம்மை ஈடுபடுத்தி
இருக்கின்றோம்?
எந்த அளவிற்கு முயற்சி செய்து
கொண்டிருக்கின்றோம்?
என்ற எம் மனதின் கேள்விகள் தான் பதிலளிக்க
வேண்டும்.
ஏனெனில் ,ஒரு விடயத்தை எந்த அளவிற்கு
கையாண்டு கொண்டிருக்கிறோம் என்பது
அவரவர் உள்ளத்தை பொருத்தது.
வாசிப்பும், எழுத்தும், வாய்மொழியும்,
வகை வகையாய் வளர்ந்து,
வலம் வந்து கொண்டிருக்கின்ற
இந்த பெறுமதியான காலத்தில்,
எம் வாழ்க்கைக்கு அத்தியவசியமாக
வாசித்து அறிந்து, புரிந்து
கொள்ள வேண்டியவற்றை
எமக்குத் தெரியாமலேயே
இழந்து கொண்டு இருக்கின்றோமா?
அழகானவற்றை தெரிந்தோ தெரியாமலோ
அலட்சியப்படுத்திக் கொண்டிருக்கின்றோமா?
மறந்து கொண்டிருக்கின்றோமா?

இது ஏன் ?
என்ற கேள்விக்கு பலவிதமான காரணங்கள்
உருவாக்கப்படலாம். காரணங்களைக் கூறி நாம்
மற்றவர்களை ஏற்றுக்கொள்ள வைக்கும் அதே
சமயம் ,
அக் காரணங்களில் பலவற்றை,
எம் இதயம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது என்பது
வியப்பல்ல.

ஒரு விடயம் "அவசியம்" என்ற நிலையிலிருந்து,
"அத்தியவசியம்" என்ற நிலைக்குள்
மாறும்போது,
எமக்கு எதுவும் விடுபடப் போவதும் இல்லை.
அவற்றை நாம் இழக்க நினைப்பதும் இல்லை..

உண்மையிலேயே
புலமைகளும், புலன்களும், காலமும் எமக்கு
சோதனைகளாகவே தரப்பட்டிருக்கின்றன
என்பது மட்டும் உறுதி!

**லைலா அக்ஷியா**

# வார்த்தை



தன்நிலை தடுமாறி,
உதடுகளை விட்டும் வார்த்தைகள்
உதிர்ந்து விடுவதற்கு முன்,
விலைமதிப்பற்ற ஓர் உறவை,

நட்பை கைதவறுவதை விட,
வார்த்தைகளை கவனமாக
கையாளுவதில் தவறில்லை.

பல யுகங்களில் உடன் பயணிகளாக
இருந்து ஒன்றித்த சில உறவுகளும்,
நட்புகளும், கண் சிமிட்டுகின்ற நேரத்தில்
மறைந்துவிடக்கூடும் எனவே வார்த்தைகளை
கையாளுவதில்

கவனமாய் இருந்தால் உறவுகளுக்குள்
பிரிவினை வருவது குறைந்து விடும்.

**சியாம் றிகாஸ்**
**சாய்ந்தமருது.**

# எண்ணம் போல் வாழ்க்கை



"எண்ணம் போல் வாழ்க்கை" என்ற வார்த்தையை பலரும் கூறக் கேட்டதுண்டு. இது வெறுமனே கூறப்படும் ஒரு வாய் வார்த்தையன்று. மாறாக அனுபவ ஆராய்ச்சிகளால் நிரூபிக்கப்பட்ட ஒரு நிஜ வார்த்தை. ஒருவருடைய பேச்சு , செயல் , நடத்தை போன்ற அனைத்தையும் அவனது எண்ணங்களே பிரதிபலிக்கின்றன. மனித எண்ணங்களை கொண்டே அவன் யார் , எப்படிப்பட்டவன் என்று வரையறை செய்யப்படுகின்றது. எம்மை நாமும் மற்றவர்களும் அளவிடுகின்ற அளவுகோல் தான் எண்ணம். இதனைத்தான் சுவாமி விவேகானந்தர் "நீ எதுவாக நினைக்கின்றாயோ அதுவாகவே ஆகுகிறாய்" என்று அழகாக கூறியுள்ளார்.

மனிதன் மனதளவில் எது பற்றி ஆழமாக எண்ணுகின்றானோ, ஆசை கொள்கின்றானோ அதனை அடைவதற்காக அவனது உள்ளம், உடல் இரண்டும் தயாராகும். அதன் வெளிப்பாடே செயற்பாடு. இந்த செயல்பாடுகள் அனைத்தும் எண்ணத்து வெளிப்பாடே என்பதை நாம் அறியாமல் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். ஆகவே எப்போதும் நம்முடைய எண்ணங்கள் நேர்மறையாகவும் உயர்வானதாகவும் காணப்பட்டு வாழ்வினை வளப்படுத்த வேண்டுமே ஒழிய அது, எதிர்மறையானதாகவோ, தாழ்ம்மைப்படுத்தப்பட்டவையாகவோ இருந்து வாழ்வை அழிவின் பால் இட்டுச் செல்வனவாக இருத்தல் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும்.

இவ்விதமான உயர்ந்த எண்ணங்களைக் கொண்ட மனிதர்கள் தாம் மகிழ்வுடன் இருப்பதன்றி அவர்களின் எண்ணங்களால் மற்றவர்களையும் மகிழ்விக்கும் பண்புடையவர்களாகவே இருப்பார்கள். ஒன்றில் நாம் வெற்றியடைய வேண்டும் எனில் முதலில் "என்னால் முடியும்" என்ற உயர் எண்ணம் அவரது உள்ளத்தில் ஆழப் பதிப்பித்துக் கொள்ள வேண்டும்.

அது தான் அவரது முதல் வெற்றியாக அமையும். இறுதியில் அவனால் வெற்றியை அடைய முடியாமல் போனாலும் அவனது எண்ணம் அவனை தளர்வடையச் செய்யாது முன்னோக்கிச் செல்ல என்றென்றும் துணை நிற்கும் .

**"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது தள்ளினுந் தள்ளாமை நீர்த்து "**

என்ற குறளின் ஊடாக திருவள்ளுவர் அவர்கள் உயர்வான எண்ணங்களையே எப்போதும் நினைக்க வேண்டும் என்பதை அற்புதமாக கூறியுள்ளார். ஆகவே தான் எப்போதும் எதிர்மறையான, கேள்விக்குறியான எண்ணங்கள் உள்ளத்தை அணுவளவேனும் அணுக வண்ணம் காத்துக் கொள்ள வேண்டும்.

எது எவ்வாறாயினும் எல்லோர் வாழ்விலும் தோல்விகள், கஷ்ட துன்பங்கள் மற்றும் இழப்புக்கள் என்பன ஏற்படும். அது தான் வாழ்க்கை நியதி. அவற்றிலிருந்து முற்று முழுதாக விலகி நிற்க முடியாது. எனினும் இது என்ன வாழ்க்கை, எல்லாம் நமக்கு மட்டும் தான் ஏற்படுகிறது என் தலைவிதி எதுவும் சரியாக நடப்பதில்லை என்று தாழ்வாக எண்ணி கதி கலங்கி நிற்காமல், அவற்றிலிருந்து மீண்டு வெற்றி நடை போட்டு முன் செல்ல வேண்டும். கெட்ட எண்ணங்களை தூர எறிந்து விட வேண்டும்.

இவ்வாறான எண்ணங்களிலிருந்து விடுபட கவலைகள் ஏற்படும் போது வாழ்வின் மிகவும் இனிப்பான மகிழ்வான தருணங்களை பற்றி சிந்தித்தாலே போதும். உள்ளம் அமைதி அடையும். ஆகவே நாம் எப்போதும் எமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் விடையங்களில் ஈடுபடல் , அப்படிப்பட்டவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளல் மற்றும் மகிழ்ச்சியைத் தேடிச் செல்லல் போன்றவற்றை செய்து , அவ்வாறான அனுபவங்களை சேமித்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் நாம் உயர்ந்த எண்ணங்களுடன் நலமாக வாழ்வதுடன் எம்மை சுற்றி உள்ளவர்களையும் நலமாக வாழ வைக்க முடியும் .

**நிப்லா தாஹா.**
**தல்கஸ்பிடிய அரனாயக்க.**




# அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியம்

2004 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியமானது (All University Muslim Student Association-AumsA), இன்று இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட 16 தேசிய பல்கலைக்கழகங்களை அடிப்படையாகக் கொண்ட 26 பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ்களை அங்கத்துவ அமைப்புக்களாக கொண்டுள்ளதுடன் ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 20 இற்கும் மேற்பட்ட இளங்கலை பட்டதாரிகள் அமைப்புக்களுடன் புரிந்துணர்வுடன் செயற்பட்டடு வருகின்ற மிகவும் பிரம்மாண்டமான மாணவர் அமைப்பு ஒன்றாக இன்று வளர்ச்சியடைந்துள்ளது.

இந்த அமைப்பானது, முஸ்லிம் இளங்கலை பட்டதாரிகள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட காலங்களில் இருந்தே ஆரம்பிக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்கள் ஒருமித்து இயங்க வேண்டும் என்ற சிந்தனையுடன் 1973 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் உருவாக்கப்பட்ட சர்வ வளாக முஸ்லிம் மஜ்லிஸை இதற்கு ஆதாரமாகக் குறிப்பிட முடியும். இக்காலத்தில் இளங்கலை பட்டதாரிகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் பயனுள்ள பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்ததுச் செல்லும் நோக்கிலான ஒருமித்த சிந்தனையைக் கொண்டிருந்தனர். அதே சிந்தனையின் அடிப்படையிலே தான் 2004 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியமும் இன்று இயங்கி வருகின்றது.

2004 ஆம் ஆண்டினைத் தொடர்ந்து வந்த காலங்களிலும் முஸ்லிம் மாணவர்களை ஒன்றிணைக்கும் முயற்சிகள் அ.ப.மு.ம.ஒன்றியமின் நிர்வாக உறுப்பினர்களால் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டது. இன்று அனைத்து பல்கலைக்கழகங்களினதும் முஸ்லிம் மாணவர்களையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவந்துள்ளதுடன், பல்வேறு சமூக நல செயற்பாடுகளையும் மேற்கொண்டு சமூகத்தில் தனக்கென ஒரு இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

2004 ஆம் ஆண்டிற்கு பின்னரான காலப்பகுதிகளிலும் பல்வேறு தங்குதடைகளைத் தாண்டி பல இளங்கலைப் பட்டதாரிகளின் முயற்சியால் சிறப்பாக இயங்கியது. அதில் குறிப்பாக, 2014ம் ஆண்டுகளில் கொழும்புப் பிராந்திய பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஒரு நாள் பயிற்சிப்பட்டறைகள் மேற்கொள்ளப்பட்டமையையும், அதனையடுத்து 2015ம் ஆண்டில் அனைத்து முஸ்லிம் மஜ்லிஸ்களையும் ஒருங்கிணைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளையும், பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ரீதியிலான கருத்தரங்குகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான தொழில் சார் வழிகாட்டல்களும் நடாத்தப்பட்டமை பற்றியும் குறிப்பிடலாம். மேலும் 2016ம் ஆண்டில் க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான தேசிய ரீதியிலான கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டன. மேலும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான இலங்கை நிர்வாக சேவை (SLAS) வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும், பல்கலைக்கழக மாணவர்களுக்கான மூன்று நாள் பயிற்சிப்பட்டறைகளும், அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவுடன் (ACJU) இணைந்து இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளும் இக்காலப் பகுதியில் நடாத்தப்பட்டன. தொடர்ந்து 2017ம் ஆண்டுகளில், அனைத்து முஸ்லிம் மஜ்லிஸ்களையும் ஒருங்கிணைக்கும் செயற்பாடுகள், பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ரீதியிலான கருத்தரங்குகள், வழிகாட்டல்கள் மற்றும் தொழில் சார் வழிகாட்டல் செயற்பாடுகள் என்பன மேற்கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து 2020 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. இந்நிகழ்வு 28.12.2019 ஆம் திகதி யேயுளு கலாசார மையம், கொடிகாவத்தையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை,தேசிய ஷ•ரா சபை) ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்சில் ஆகிய இஸ்லாமிய அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் அங்கத்தவர்கள், சர்வ வளாக முஸ்லிம் மஜ்லிஸின் முன்னாள் தலைவர்கள், அ.ப.மு.ம.ஒன்றியமின் முன்னாள் தலைவர்கள் மற்றும் முஸ்லிம் மஜ்லிஸ்களின் தலைவர்களோடு 20 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் மஜ்லிஸ்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 200கும் மேற்பட்ட இளங்கலை பட்டதாரிகளும் கலந்துகொண்டனர்.

2020ஆம் ஆண்டுக்கான அ.ப.மு.ம.ஒன்றியமின் தலைவராக களனி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சகோதரர் அஹ்மத் ஸாதிக் அவர்களும் செயலாளராக யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகத்தைச் சேர்ந்த சகோதரர் எல்.எம். சாஜித் அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். மேலும் பெண்கள் பிரிவின் தலைவியாக கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சகோதரி எம்.எம். முபஷ்ஷரா பேகம் அவர்களும் செயலாளராக இலங்கை சட்ட கல்லூரியை சேர்ந்த சகோதரி மர்ஷதா மக்கீ அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். இவர்கள் முழு அமைப்பினதும் பிரதி தலைவி மற்றும் உதவி செயலாளராக செயற்படுபவர்களாவர்.

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட 16 தேசிய பல்கலைக்கழகங்களை அடிப்படையாகக் கொண்டு 26 பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ்கள், அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியத்தின் அங்கத்துவ அமைப்புக்களாக இருப்பதுடன்



அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியத்தின் தலைவர்
**அஹ்மத் ஸாதிக்**
களனி பல்கலைக்கழகம்



அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியத்தின் செயலாளர்
**எல்.எம். சாஜித்**
யாழ்ப்பாண பல்கலைக்கழகம் வவுனியா வளாகம்











அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியத்தின் பெண்கள் பிரிவின் தலைவி

**எம்.எம். முபஷ்ஷரா பேகம்**

கொழும்பு பல்கலைக்கழகம்



அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியத்தின் பெண்கள் பிரிவின் செயலாளர்

**மர்ஷதா மக்கீ**

இலங்கை சட்ட கல்லூரி

ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 20 இற்கும் மேற்பட்ட இளங்கலை பட்டதாரிகள் அமைப்புக்களும் புரிந்துணர்வுடன் செயற்படுகின்ற மிகவும் பிரம்மாண்டமான சாம்ராஜ்யமாக அ.ப.மு.ம.ஒன்றியமின் வளர்ச்சி அடைந்திருப்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயமே. அத்தோடு இதன் நிர்வாகக் குழுவின் தலைவர் செயலாளர் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பதவிகளிலும் பெண்களுக்கான சம அங்கத்துவமானது உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். மேலும் இவ்வமைப்பானது வெறுமனே நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்கின்ற அமைப்பொன்றாக அல்லாமல் இலங்கையில் இருக்கின்ற அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்களையும் ஒன்றிணைக்கும் மையமாக செயற்படுகின்றது. இந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக அகில இலங்கை ஜம்மியதுல் உலமா, தேசிய ஷூரா சபை, ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்ஸில், முஸ்லிம் இளைஞர்கள் சம்மேளனம், இலங்கை முஸ்லிம் ஊடக மன்றம் போன்ற தேசிய அமைப்புக்களுடன் கைகோர்த்து அனைத்து பல்கலைக்கழங்களிலுமுள்ள மாணவர்களுக்கு பிரயோசனம் அளிக்கக்கூடிய செயற்பாடுகளான கல்விக்கு மேலதிகமான கலை, கலாசாரம் மற்றும் தலைமைத்துவம் என்பவற்றை மேலோங்கச் செய்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டது.

**அத்தோடு கொவிட்-19 அசாதாரண காலப்பகுதியில் பிரதானமான ஐந்து திட்டங்களை நடைமுறைப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.**

அவற்றுள்,

1. 1000 இற்கும் மேற்பட்ட ஆண்,பெண் இளங்கலை பட்டதாரிகளைக் கொண்ட தன்னார்வலர் குழு உருவாக்கப்பட்டமை.
2. E-Study எனும் இணையவழி கற்பித்தல் செயற்பாடு இளங்கலை பட்டதாரிகளால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.
3. உணவுப் பற்றாக்குறையை தீர்க்கும் முகமாக 1000 வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கை திட்டத்தினை தேசிய ஷூரா சபையுடன் இணைந்து மேற்கொண்டது.
4. பல்கலைக்கழக மாணவர்களது எழுத்தாற்றலை மேம்படுத்தும் முகமாக “வழித்தடம்” எனும் ஆய்வு கட்டுரைகளை எழுதும் களத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. இதில் மிகச் சிறந்த கட்டுரைகளாக தெரிவு செய்யப்படுபவை பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன.

5. நடைமுறை பிரச்சினைகளுக்கு ஏற்ற தலைப்புக்களை உள்ளடக்கியதாக 10 இற்கும் மேற்பட்ட அமர்வுகளை கொண்ட "இணையவழி செயலமர்வுத் தொடர்" மேற்கொள்ளப்பட்டது. இச் செயலமர்வுத் தொடரானது பல உலமாக்களையும் கல்விமான்களையும் கொண்டு மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. மேலும் பட்டப்பின் படிப்பு வழிகாட்டல் தொடர்கள் (Post Graduate Guidance series), போன்ற அனைத்து செயலமர்வுகளும் மிகவும் பயனளிக்கும் வகையில் அமைந்ததுடன் மிகுந்த வரவேற்பையும் பெற்றன.

மேலும் பிரதானமான ஒரு விடயமாக பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ்களை அடிப்படையாக வைத்து நாட்டில் ஏற்படுகின்றன நடைமுறைப் பிரச்சினைகளை கருத்திற்கொண்டு 9 விடயங்களை உள்ளடக்கிய அ.ப.மு.ம.ஒன்றியமின் கொள்கை அறிக்கை (Policy Statement) இக்காலப் பகுதியிலேயே வெளியிடப்பட்டது. அ.ப.மு.ம.ஒன்றியமின் இந்த கொள்கைகளுக்கு பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ்களாளும், சமூகத்தினராலும் பெரும் வரவேற்பு கிடைக்கப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. 2019 ஆம் ஆண்டில் பகிடி வதைக்கு எதிராக வெளியிடப்பட்ட அறிக்கையை தற்போதைய நிர்வாகமும் (2020) மீள்வெளியிட்டு பகிடி வதைக்கான கடுமையான எதிர்ப்பைக் காட்டியது. 1973, 2004 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட சர்வ வளாக முஸ்லிம் மஜ்லிஸ் மற்றும் அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் அமைப்புக்களுக்கு நிலையானதொரு அரசியலமைப்பு இல்லாத நிலையில், 2020 ஆம் ஆண்டிற்குரிய நிர்வாகக் குழுவினால் முதன்முதலில் அ.ப.மு.ம.ஒன்றியமிற்கென்றே பூரணமான ஒரு அரசியலமைப்பு பல எதிர்கால விடயங்களையும் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்டது. மேலும் பலமிழந்திருந்த பிராந்தியங்களிலுள்ள பல்கலைக்கழகங்களை ஒன்றிணைத்து தலைமைத்துவ நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்குச் சான்றாக கல்முனையில் இடம்பெற்ற நிர்வாக சபை மற்றும் ஆலோசனை சபை சந்திப்பினை குறிப்பிடலாம்.

மேலும் பல்கலைக்கழக முஸ்லிம் இளங்கலை பட்டதாரிகளின் தரவுகள், திரட்டப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டு, மீள் கையாளுவதற்கும் மாணவர் – பல்கலைக்கழக நுழைவு விகிதங்களை கண்காணிப்பதற்கும் ஏற்ற விதத்தில் “தரவு சேகரிப்பு” என்னும் செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. முஸ்லிம் மாணவர்களது பல்கலைக்கழக நுழைவினை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் 2020 இல் அ.ப.மு.ம.ஒன்றியமினால் மேற்கொள்ளப்பட்ட தேசிய செயற்பாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். “Spade to Shade” எனும் அ.ப.மு.ம.ஒன்றியமின் வழமையான மரநடுகை செயற்திட்டமானது 2020,2021 ஆம் ஆண்டுகளிலும் இடம்பெற்றது. அத்தோடு “முஸாபஹதுல் புர்கான்” எனும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான கிராஅத் போட்டி நிகழ்ச்சியொன்றும் அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவுடன் இணைந்து நடாத்தப்பட்டது, பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ்களின் வரலாற்றை தொகுக்கும் முகமாக “ஹிஸ்டோரியா” எனும் போட்டி நிகழ்ச்சியொன்றையும் நடாத்துவதற்கான செயற்பாடுகள் இக்காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டன என்பதை நினைவுபடுத்துவது பொருத்தமாகும். மேலும் "Bright path" எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான வழிகாட்டல் நிகழ்வுகள் மற்றும் கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டன.மேலும் இவ்வகையான நிகழ்வுகளை காலத்துக்குக் காலம் நடாத்துமாறும் அ.ப.மு.ம.ஒன்றியமின் முஸ்லிம் மஜ்லிஸ்களுக்கு வழி காட்டியது.

39 நிர்வாக அங்கத்தவர்களைக் கொண்ட (2020–2021) இந்த அமைப்புடன் தற்போது சுமார் 26 முஸ்லிம் மஜ்லிஸ்களும், 20இற்கும் மேற்பட்ட இளங்கலை பட்டதாரிகள் அமைப்புக்களும் ஒரு புரிந்துணர்வுடன் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. மேலும் அ.ப.மு.ம.ஒன்றியமின் இலங்கையில் உள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கும் பல துறைகளையும் சார்ந்த 9000 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் மாணவர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு இயங்கி வருகின்றது. எதிர்காலத்திலும் இதன் பயணம் தொடரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

துணிந்தெழு இதழுக்கான, நேர்காணலில் எம்மோடு இணைந்திருப்பவர் ஓர் எழுத்தாளர், கவிஞர், கதாசிரியர், நூல் விமர்சகர், பாடலாசிரியர், சிறுவர் படைப்பாளர், சஞ்சிகை துணையாசிரியர் மற்றும் ஊடகவியலாளர் எனப் பன்முக ஆளுமை கொண்ட படைப்பாளி, தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா அவர்கள்.


**கேள்வி 01**

## உங்களது பூர்வீகம் (பிறப்பிடம்), கல்லூரி வாழ்க்கை பற்றிக் கூறுங்கள்?

வானலாவ உயர்ந்த மரங்களும், உடலுக்கும் உள்ளத்துக்கும் புத்துணர்ச்சி தரும் குளிர்மையும் கொண்ட தியத்தலாவை என் சொந்த ஊராகும். இது பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ளது.

நான் தரம் 01 முதல் 05 வரை கஹகொல்லை அல் பத்ரியா மகா வித்தியாலயத்திலும் தரம் 06 முதல் 09 வரை வெலிமடை முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் தரம் 10 முதல் உயர் தரம் வரை பண்டாரவளை சேர் ராசிக் பரீட் முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் கல்வி கற்றேன்.

உயர் தரத்துக்குப் பிறகு சில கணினி பாடநெறிகளையும் நிறைவு செய்த நான், அதன் பிறகு 2013 ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இதழியல் டிப்ளோமாப் பாட நெறியைப் பூர்த்தி செய்தேன்.




**நேர்காணல்**
**பாத்திமா ஷிப்னா ஆதம்**



**(ஓர் எழுத்தாளர், கவிஞர், கதாசிரியர், நூல் விமர்சகர், பாடலாசிரியர், சிறுவர் படைப்பாளர், சஞ்சிகை துணையாசிரியர் மற்றும் ஊடகவியலாளர்)**

# தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா

University of Colombo Sri Lanka



Faculty of Arts
Diploma In Journalism 2012-2013 Batch





**கேள்வி 02**

### உங்கள் தொழில் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வீர்களா?

2013 ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கை நெறியைப் பூரணப்படுத்தியதைத் தொடர்ந்து கல்வி அமைச்சின், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் கணினி வடிவமைப்பாளராக 2018 வரை கடமை புரிந்தேன்.

**கேள்வி 03**

### உங்களை எழுத்துத் துறைக்கு வரத் தூண்டிய விசேட காரணங்கள் யாவை?

சிறுவயதிலிருந்து என்னிடம் குடிகொண்டிருந்த வாசிப்புப் பழக்கம் பின்னாட்களில் என்னை எழுத்துத் துறையில் ஈடுபாடு காட்ட வைத்தது. எனது உள்ளத்தின் உணர்வுகள் பேனா மை கொண்டு காகிதங்களில் வார்க்கப்பட்டன. அவற்றைப் பத்திரிகைகளுக்கும் அனுப்பி, அவை தங்குதடையின்றி பிரசுரமானமை என் தேடலுக்கு இன்னும் பலம் சேர்த்தது என்று சொல்லலாம்.

**கேள்வி 04**

### எப்போது, எந்த வயதிலிருந்து ஏழுத்துத் துறையில் ஈடுபட ஆரம்பித்தீர்கள்? எத்தனை வருடங்களாகச் செய்து வருகின்றீர்கள்?

தரம் மூன்றில் பூங்கா என்ற சிறுவர் பத்திரிகையில் எனது ஆக்கம் பிரசுரமானது. அதனைத் தொடர்ந்து தரம் எட்டில் கல்வி கற்கும் போது அதிகமான பத்திரிகைகள், வாசிகசாலை நூல்கள் போன்றவற்றைத் தீவிரமாக வாசிக்க ஆரம்பித்தேன். அவ்வப்போது தோன்றுபவற்றை உடனுக்குடன் எழுத பிரத்தியேகமாக ஒரு புத்தகத்தை வைத்திருந்தேன். உயர் தரம் கற்கும் போது மெட்ரோ நியூஸ் பத்திரிகைக்கு அனுப்பிய சிறு கவிதைகள் பிரசுரமாகின. காத்திருப்பு என்ற தலைப்பிலான எனது கவிதையை முதன் முதலில் 2004 ஆம் ஆண்டு மெட்ரோ நியூஸ் பத்திரிகையில் வெளிவந்தது. தொடர்ச்சியாக இலங்கை முன்னோடிப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் வானொலி நிகழ்ச்சிகளுக்கு எனது படைப்புகளை அனுப்பி வைத்தேன். 2004 இல் தொடர்ந்த என் இலக்கியப் பயணம் இன்று வரை சுமார் 18 ஆண்டுகளாகத் தொடர்கிறது.








**கேள்வி 05**

### நீங்கள் எழுதிய கவிதைகளைப் பற்றிச் சொல்லுங்கள்.

பெரும்பாலானோரைப் போல அக உணர்வுக் கவிதைகளையே நானும் ஆரம்ப காலத்தில் தொடர்ச்சியாக எழுதி வந்தேன். எனது கவிதைகளின் விசேடத்துவம் யாதெனில் சந்தம் பிசகாமல் எழுதுவதாகும். எதுகை, மோனை போன்ற விடயங்கள் பற்றி ஆரம்பத்தில் எனக்குத் தெரியாவிட்டாலும் என் தொடர் வாசிப்புப் பழக்கத்தினால் இயற்கையாகவே அவற்றை என் கவிதைகளுக்குள் காண முடிந்தது. இது நானாகவே சொன்னதொன்றல்ல. பல மூத்த கவிஞர்கள் என்னைப் பாராட்டி சிலாகித்துப் பேசும் போது தான் நானே அவற்றைத் தெரிந்துகொண்டேன். எந்தத் தலைப்பில் கவிதை எழுதினாலும் சந்தம் பிசகாமல் என்னால் எழுத முடிவது இறைவன் தந்த அருட்கொடை என்றே கூற வேண்டும்.

அகநிலை, பெண்ணியம், சமூக அவலம், சமூக முன்னேற்றம், சீதனக் கொடுமை, மலையகப் பிரச்சினை, போர்ச் சூழல், மானிட நேயம் என்பன எனது படைப்புக்களின் பாடுபொருள்களாகக் காணப்படுகின்றன.

**கேள்வி 06**

### இதுவரை நீங்கள் வெளியிட்டுள்ள புத்தகங்களைப் பற்றி குறிப்பிடுங்கள்.

இதுவரை இன்னும் உன் குரல் கேட்கிறது (கவிதை – 2012), வைகறை (சிறுகதை – 2012), காக்காக் குளிப்பு (சிறுவர் கதை – 2012), வீட்டிற்குள் வெளிச்சம் (சிறுவர் கதை – 2012), இதோ பஞ்சுக் காய்கள் (சிறுவர் கதை – 2012), மரத்தில் முள்ளங்கி (சிறுவர் கதை – 2013), திறந்த கதவுள் தெரிந்தவை ஒரு பார்வை (விமர்சனம் – 2013), நட்சத்திரம் (சிறுவர் பாடல் – 2014), மெல்லிசைத் தூறல்கள் (பாடல் – 2016), மழையில் நனையும் மனசு (கவிதை – 2018) ஆகிய 10 நூல்களை வெளியிட்டிருக்கிறேன்.

புரவலர் புத்தகப் பூங்கா மூலமாக 2012 இல் இன்னும் உன் குரல் கேட்கிறது என்ற எனது முதலாவது கவிதைத் தொகுதி வெளிவந்தது. அந்த அதிர்ஷ்டத்தைத் தொடர்ந்து ஏனைய நூல்களும் ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கியது. அந்தவகையில் புரவலர் ஹாசிம் உமர் அவர்களுக்கும், கலைஞர் கலைச்செல்வன் அவர்களுக்கும், சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ. நாகூர்கனி அவர்களுக்கும், எனது முதலாவது நூலை புரவலர் புத்தகப் பூங்கா நிறுவனத்தாரிடம் சேர்ப்பித்த படைப்பாளர் வெலிகம ரிம்ஸா முஹம்மத் அவர்களுக்கும், அமரர் நீர்வைப் பொன்னையன் அவர்களுக்கும், ஜீம் டு ரீட் நிறுவனத்துக்கும், கொடகே பதிப்பகத்துக்கும், தேசிய நூலக ஆவணவாக்கல் சபைக்கும் என்றென்றும் எனது நன்றிகள் உரித்தாகும்.



**கேள்வி 07**

**தாங்கள் வெளியிட்ட "மெல்லிசைத் தூறல்கள்" என்ற பாடல் நூலினைப் பற்றி குறிப்பிடுங்கள்.**

இதில் 36 பாடல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்துக்கான அணிந்துரையை பேராசிரியர் துரை மனோகரன் அவர்களும், வாழ்த்துரையை திருமதி. ரதி தேவசுந்தரம் அவர்களும் நூலின் பின்னட்டைக் குறிப்பை கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலன் அவர்களும் வழங்கி இருக்கின்றார்கள்.

இந்த நூலில் ஆன்மீகப் பாடல்கள், சமூகப் பாடல்கள், காதல் பாடல்கள், கானா பாடல்கள் என எல்லா எல்லாத் துறைகளிலிருந்தும் எழுதியிருக்கின்றேன்.





**கேள்வி 08**

**நீங்கள் எழுதிய பாடல்களினை இசை சேர்த்து இறுவட்டாக வெளியிட்டுள்ளீர்களா?**

எனது புத்தகத்தில் உள்ள இரு பாடல்கள் பாடகர் திரு. டோனி ஹஸன் அவர்களாலும், பாடகர் திரு. கலைக்கமல் அவர்களாலும் இசையமைத்து பாடப்பட்டுள்ளன. டோனி ஹஸன் அவர்கள் இசையமைத்துப் பாடிய "இன்பங்கள் பொங்கும் இரு பெருநாளிலே" என்ற பாடல் நேத்ரா அலைவரிசையில் ஒளிபரப்பப்பட்டுள்ளது. கலைக்கமல் அவர்கள் இசையமைத்துப் பாடிய, "மக்காவில் பிறந்த மாணிக்கமே" என்ற பாடல் அவர் வெளியிட்ட மண்வாசனையில் மகரந்தப் பூக்கள் என்ற இறுவட்டில் இணைக்கப்பட்டிருக்கின்றது.

அதுதவிர இன்னும் சில இசையமைப்பாளர்களும் எனது பாடல்களுக்கு இசையமைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவை முடிவுற்றதும் எனது பாடல்களை இசை வடிவில் கேட்கும் வாய்ப்புக் கிடைக்கும்.





**கேள்வி 09**

## பாடல்கள் எழுத முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்குள் எவ்வாறு ஏற்பட்டது?

நான் சிறு வயதிலேயே பாடல்களை ரசிப்பவள். என் நண்பிகள் எல்லோரும் புதிய பாடல்களைக் கேட்கும் சந்தர்ப்பங்களில் நான் பழைய பாடல்களையும் கேட்டு ரசித்திருக்கின்றேன். அவர்கள் புதிய இசைகளை விரும்புவார்கள். ஆனால் நான் இசையோடு சேர்த்து பாடல் வரிகளுக்குள் லயித்திருப்பேன். பாடல்களைக் கேட்டுக்கொண்டு என் காரியங்களைச் செய்வதில் எனக்கு அலாதி விருப்பமும், பிரியமும் இருந்தது. எந்தளவுக்கென்றால் தரம் ஐந்து புலமைப் பரிசிலுக்காக படிக்கும் சந்தர்ப்பமானாலும் சரி, சா.த பரீட்சை, உயர். தர பரீட்சைக்காக படிக்கும் காலமானாலும் சரி பாடல்களோடு எனக்கிருந்த உறவு அறுந்து போகவில்லை. இதனால் பலரிடம் நான் திட்டு வாங்கியிருக்கின்றேன். படிக்கும் நேரத்தில் பாடல் கேட்க வேண்டாம் என்று பலமுறை அறிவுறுத்தப்பட்டிருக்கின்றேன். எனினும் 05 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையிலும் சரி, சா.தர, உயர் தர பரீட்சைகளிலும் சரி நான் கோட்டை விடாமல் சித்தியடைந்தேன். என் கலையுணர்வு என் கல்விக்கு தடையாக இருக்கவில்லை. என்னிடம் 'Part II' படித்தாயா? என்று கேட்கும் போது கூட "பாட்டு" படிச்சேன் என்று சொல்லியிருக்கிறேன்.

"குடை பிடித்து செருப்புமிட்டு புத்தகமும் கொண்டு" என்ற சிறுவர் பாடலை ஆசிரியர் இசையோடு சொல்லித் தந்ததுவும், "கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று காவல் புரிகின்ற சேவகா" என்ற பாடலை ரசனையோடு பாடியதும் இன்றும் பசுமரத்தாணி போல நெஞ்சில் பதிந்திருக்கின்றது.

அதேபோல தரம் ஒன்பதில் நான் கற்கும் போது எனது தாயார்தான் எமக்கு தமிழ்ப்பாட ஆசிரியராக இருந்தார். அந்த புத்தகத்தில் காணப்பட்ட கீழ்வரும் பாடலை சினிமா பாடல் மெட்டொன்றுக்கு பாடிக்காட்டும்படி ஆசிரியர் (எனது தாயார்) மாணவர்களுக்குச் சொன்னார். நான் பல பாடல்களின் இசையுடன் பொருத்திப் பார்த்தேன். இறுதியில் "செம்பருத்திப் பூவே செம்பருத்திப் பூவே உள்ளம் அள்ளிப் போனாய் நினைவில்லையா?" என்ற பாடலின் மெட்டுக்கு இது பொருந்தியது.

போட்டார் மணி அடிக்க
போகட்டும் என்று சொல்லி
காட்டார் கொடி எடுத்து
காட்டி கணைத்தபடி
ஓட்டம் தொடங்கிற்று
உயிர் பெற்று ஒரு வண்டி
கட்டிடங்கள் கீரை களனிகளாய்...

அதேபோல பாடசாலையில் நடக்கும் பாடல் போட்டிகள், மத்ரஸாவில் நடக்கும் மீலாத் தின பாடல் போட்டிகளுக்கு எனது தாயார் ஹிந்திப் பாடல்கள், பழைய தமிழ் பாடல்கள் ஆகியவற்றின் மெட்டுக்கு வேறு பாடல்களை எழுதித் தருவார். அவற்றைப் பாடி பல தடவைகள் மாகாண மட்டங்களிலும் முதலிடம் பெற்றிருக்கின்றேன். நான் பாடும்போது சபையில் ஊசி விழுந்தாலும் கேட்கும் ஒரு அமைதி நிலவும். அதை எனது ஆசிரியர்கள் மிகப் பெருமையாகக்கூறி என் தாயாரிடம் என்னைப் பற்றி பாராட்டுவார்கள்.

இவ்வாறு இருந்த என் திறமைகளை நானே மறந்திருந்திருந்தேன். பாடலுக்கும் எனக்கும் தொடர்பே இல்லாமலிருந்த சந்தர்ப்பத்தில்தான் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் தனியார் அமைப்புக்கள் ஆகியன ஆண்டு தோறும் திறந்த மட்ட பாடல் போட்டிகளை நடாத்துவார்கள். அதுகுறித்து பத்திரிகைகளில் பிரசுரமான பாடல் போட்டிக்கான தகவல்களை சகோதரி ரிம்ஸா முஹம்மத் எனக்கு சொல்லித் தருவார். அவர் சொல்லித் தராவிட்டால் அப்போட்டிகளுக்கு நான் எழுதி, அவற்றை அனுப்பி வைத்து, முதல் பரிசும், பாராட்டும் பெற்றிருக்க முடியாது. மெல்லிசைத் தூறல்கள் என்ற புத்தகத்தைக்கூட வெளியிட்டிருக்க முடியாது.



## கேள்வி 10

**உங்களின் இலக்கியச் சேவைகளைப் பாராட்டி பட்டங்கள், விருதுகள் கிடைத்துள்ளனவா? அதுபற்றி குறிப்பிடுங்கள்.**

2013 இல் அகில இலங்கை கவிஞர்களின் சம்மேளனம் – காவிய பிரதீப விருது (கவிச்சுடர் விருது)

2015 இல் ஊவா மாகாண சாகித்திய விழா– ஆக்க இலக்கியவாதிக்கான எழுசுடர் விருது

2016 இல் இலங்கை இஸ்லாமிய கலை இலக்கிய ஆய்வகம் – எழுத்தாளருக்கான கௌரவ விருது

2018 இல் பாணந்துறை இஸ்லாமியப் பேரவை மற்றும் இலக்கிய வட்டம் – கலையொளி விருது










**கேள்வி 11**

### உங்கள் வாழ்வில் மறக்க முடியாத சம்பவம் ஒன்றை பகிர்ந்துகொள்ள முடியுமா?

இலங்கைக் கம்பன் கழகம் வருடாந்தம் நடாத்தும் கவிதைப் போட்டியில் மொத்தமாக மூன்று முறை கலந்து கொண்டுள்ளேன். முதலாவது முறை நேரடிக் கவிதைப் போட்டியில் கலந்துகொண்ட எனக்கு அனுபவம் மட்டுமே கிடைத்தது. 2014 ஆம் ஆண்டில் சளைக்காமல் இரண்டாவது முறையும் கலந்து கொண்டேன். அதில் இரண்டாம் இடம் பெற்று வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டேன். இறுதித் தடவை ஏனோ போட்டியில் கலந்துகொள்ளும் எண்ணம் எனக்கு இருக்கவேயில்லை. அப்போது சகோதரி ரிம்ஸா முஹம்மத் கவிதை எழுதும் சில நுட்பங்களைச் சொல்லித் தந்து, என்னை வழுக்கட்டாயமாக போட்டியில் பங்கு பெறச் செய்ததோடு தங்கப் பதக்கத்தோடு வா என்று அன்புக் கட்டளையிட்டார். எப்படியாவது முதலாம் இடம் பெற வேண்டும் என்ற எண்ணத்தை மனதுக்குள் குடியிருத்தி, போட்டியில் கலந்து கொண்டேன். எண்ணம் போன்று வாழ்க்கையல்லவா? நினைத்தபடியே 2015 ஆம் ஆண்டில் முதலாம் இடம் பெற்று தங்கப் பதக்கத்தை எனதாக்கிக் கொண்டேன். இது என் வாழ்வில் மறக்க முடியாத சம்பவங்களில் ஒன்றாகும்.

**கேள்வி 12**

### இந்த நேர்காணலூடாக விசேடமாகக் கூற விரும்பும் செய்தி என்ன?

எழுத்துத் துறைக்குள் இருப்பவர்கள் ஜாதி மத பேதமின்றி, வயது வித்தியாசமின்றி ஏனையவர்களின் படைப்புகளை வாசிக்க வேண்டும். கருத்துக்களை பரிமாறிக் கொள்ள வேண்டும். முகப் புத்தகத்தில் புதிதாகப் படைப்புகளை எழுதுபவர்கள் மூத்த எழுத்தாளர்களோடு தொடர்புகளைப் பேணி, தங்கள் படைப்புகளை செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். தம்மை அதிமேதாவிகள் என்று எண்ணிக்கொள்பவர்கள் தங்கள் மனப் போக்கை மாற்றி, அனைவரையும் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.


**கேள்வி 13**

### இறுதியாக என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

துணிந்தெழு சஞ்சிகையூடாக கலைஞர்களை அட்டைப்பட அதிதியாக அலங்கரித்து, நேர்காணல் செய்து வரும் உங்களுக்கு எனது வாழ்த்துக்கள். அத்தோடு என்னையும் இச்சஞ்சிகையில் நேர்காணல் செய்வதற்காக தொடர்புகொண்ட சகோதரர் ஜே.எம். பாஸித் மற்றும் சஞ்சிகைக் குழுவினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



# பூக்கள் செய்தேன்



பூக்கள் செய்தேன்.
அநியாயக்காரர்களுக் கெதிராக,
ஒரு புயல் செய்ய முடியவில்லை.

பூக்கள் செய்தேன்.
ஏழைகளை ஏய்த்துழைத்து,
தொந்திவளர்க்கும்,
தந்திரக்காரர்களுக் கெதிராக,
ஒரு சாட்டை செய்யமுடியவில்லை.

பூக்கள் செய்தேன்.
சுகதேகிகளை நோயாளிகளாக்கி,
சேமிப்புகளை உறிஞ்சும்,
மருத்துவ மாபியாக்களுக்கெதிராக்
ஒரு சட்டம் செய்ய முடியவில்லை.

பூக்கள் செய்தேன்.
கல்வி வியாபாரிகளுக் கெதிராக,
ஒரு நம்பிக்கையில்லா
பிரேரணை செய்ய முடியவில்லை.

பூக்கள் செய்தேன்.
பெண் குழந்தைகளைச் சிதைக்கும்,
பாலியல் குற்றவாளிகளுக்கெதிராக,
ஒரு நரகம் செய்ய முடியவில்லை.


பூக்கள் செய்தேன்.
சர்வாதிகளுக் கெதிராக,
ஒரு ஆப்பு செய்யமுடியவில்லை.

இவற்றையெல்லாம் செய்ய,
உங்கள் எவருக்கேனும் முடியுமா?
அவர்களுக்காயோர்,
கிரீடம் செய்யக் காத்திருக்கிறேன்.



**சம்மாந்துறை
மஷ்றா**

# வாழ்வோம்.. இன்றிலிருந்தாவது....!



மதிப்பில்லாத இடத்தில் மதி மறந்தும்
நின்றுவிடாதீர்...!

பிழைப்பில்லாத இடத்தில் பொழுது போக்கி
செல்லாதீர்கள்....!

யாருக்கும் உதவி செய்ய மதி இழந்து
சென்றுவிடாதே...!

பயன்படுத்துவோர் உலகம்..பட்டினியில்
தட்டில் கூட பணம் தேடும்....!

பஞ்சை அனைக்காமல் நீரை
ஊற்றிருக்கலாம்...!
நடந்து செல்லாமல் சற்று அமர்ந்தே
இருந்திருக்கலாம்...!

இரவில் தூங்காது பகலில்
தூங்கிருக்கலாம்...!
கேள்வி கேட்காது பதிலை
தேடியிருக்கலாம்!

விளக்கம் கேட்காமல் அறிவை
வளர்த்திருக்கலாம்...
செருப்பை மாட்டாது மணல் பகுதியில்
சென்றிருக்கலாம்...!


வெயிலில் அமராது மழையில் நனைய
பழகியிருக்கலாம்...!
புத்தகம் வாங்காமல் பேனா பிடிக்க
கற்றிருக்கலாம்...!

காலம் நம்மை ஒன்று மாற்றி ஒன்றை
வாய்ப்பாக யோசிக்க
வைத்துக்கொண்டேதான் இருக்கிறது...!

வாழ்வோம்..இன்றிலிருந்தாவது....!

**கார்கவி
நாகப்பட்டினம் - இந்தியா**

# அடையாளம் காண்போம்!



சுற்றம் மொழி கேட்டு–நீ
நாடிய வழி இழக்குறாயா?
கொண்டதை பெற்று
கண்டதை துறக்குறாயா?
அடி காணாது படி ஏறாது
ஏங்கியது ஏந்திடலாகுமா?

ஏக்கங்களும் தூக்கங்களும்
அட மழை துளியென
தூறிக் குவிந்தாலும்– நீ
வர்ணத் தூரிகை கொண்டு
ஆழ் மனம் வரைந்ததை
அவர்கள் காணும் முன்
அப்படியே கலைக்குறீயே!

மந்தைக்குள் முந்தி– உன்
சிந்தையில் எதைக்கொண்டாய்?
காலம் கடக்கலாம் நாளும் வழுக்கலாம்
தடங்கள் கடுக்கலாம் – உள்
தேடிய உண்மை உறையலாகுமோ!

கண் தேடியது கரம் காணாது
தன்னே பேரம் போவது
கொடிதிலும் கொடிதன்றோ!

அனைத்தும் அறிந்தவர் யாருளர்!
பாருள் உன் வழி பறையும் எவரிவர்?
கல்லடியும் சொல்லடியும்
மாறி மாறி பொழியாது
காரி உமிழும்– அவர்கள்
தொண்டை குரல் கேளாது!
பழியாகும் வலி இனி எதற்கு?
கொள் இழி சொற்கள்
வடிகட்டி படி கட்டி– வீர
நடை கட்டும் போதில்
காண்பாய் உன் அடையாளம்!
பார்ப்பார் அவர் விடை ஆழம்!

**திக்குவலை அன்ஷப்**



## எக்லக் யுனைடஸ் அமைப்பின் தலைவர் கம்பளை சிற்பி மொஹமட் இம்திஷான் வாழ்த்துகிறோம்



பள்ளிப்பருவம் தாண்டி பக்குவமடையும் வயதடைந்தது முதல் சாதாரண ஒரு மாணவனாக இருந்து 2018 ஆம் ஆண்டு முதல் எக்லக் யுனைட்ஸ் என்ற நாமத்தோடு இயங்கி வரும் அமைப்பினூடாக பல தனிநபர் மற்றும் சமூக நலனிற்காக நாடு பூராவும் உள்ள பல அங்கத்தவர்களோடு இன மத பேதமின்றி 2021 ஆண்டு வரை கிட்டத்தட்ட 107 செயற்திட்டங்களை சமூக சேவையாக செய்து முடிப்பதற்கு தலைமை தாங்கியுள்ளார்.

Ledders to lead
Grow green
Destory drugs
Hearts for humanity
E unit media

இவ்வாறான ஐந்து தொனிப்பொருளின் கீழ் எக்லக் யுனைடஸ் அமைப்பினுடாக 107 செயற்திட்டங்களை சக அங்கத்தவர்களுடன் இணைந்து செய்து முடித்துள்ளார். நல்லது செய்வது நிபந்தனையற்ற எதிர்பார்ப்புக்கு அப்பாற்பட்ட செயல்களில் ஒன்று. அதேநேரத்தில், அவ்வாறு நன்மை செய்வோரை கொஞ்சம் ஊக்கப்படுத்தினால், அவர்கள் மென்மேலும் நன்மை செய்வதைத் தொடர்வார்கள்.

உமது இந்த பயணம் எக்லக் யுனைடஸ் அமைப்புடன் இணைந்து சிகரம் தொட இறைவனை பிரார்த்திக்கிறோம்.

## மாத்தளையில் சுய முயற்சியால் கைவினை உற்பத்தி விற்பனையாளராக உருவெடுத்த

# முபஸிரா

## mubaceration.lk




தற்போது மாத்தளையில் தனது சுய முயற்சியில் கைவினை உற்பத்தி விற்பனையாளராக வளர்ந்து வரும் முபஸிரா 1999.9.4 ஆம் திகதி நிஸ்பர்க்கும் ரபிக்காகும் மகளாக பிறந்தவர். சிறு வயதிலேயே தந்தையை இழந்து தாயின் அன்பிலும் அரவணைப்பிலும் வளர்ந்தார். இவர் 2018 டிசம்பர் 1ஆம் திகதி தனது கைவினை பரிசில்கள் (handmad gifts) செய்யும் பயணத்தை ஆரம்பித்தார்.


mubaceration.lk எனும் பெயரில் எந்த ஒரு class or ஆசிரியரின் பயிற்சி இன்றி தானே தனது யோசினையில் ஒவ்வொன்றையும் புதிது புதிதாக உருவாக்கத் தொடங்கினார். ஆரம்பத்தில் எல்லோரின் கேளியும் அவரை தாழ்மைப்படுத்தியது அனாலும் தனது முயற்சியை அவர் விடவில்லை . ஆரம்பத்தில் இவரிடம் போதுமான பணம் கூட இருக்கவில்லை ஆனாலும் என்னால் முடியும் என்று நினைத்து தன்னிடம் இருக்கும் பொருட்களை வைத்து ஆரம்பித்தார்.

முபஸிரா அறபிக் கல்லூரியில் தான் கல்வி கற்றார். சிறு வயதில் இருந்தே இவர் கைவினை பொருட்கள் செய்வதில் மிக ஆர்வமாக இருந்தார் பல சான்றிதழும், பரிசும் வாங்கி உள்ளார். 3 முறை Youtube, Instragram, Facebook இல் நடைபெற்ற போட்டி நிகழ்ச்சிகளுக்கு நடுவராக இருந்துள்ளார். 18 வயதில் ஆரம்பித்து கடந்த 4 வருடங்களாக இதை தனது வீட்டுப் பொழுதுபோக்காக செய்து வருகின்றார்.

தன் கற்பனையில் வரும் ஒவ்வொன்றையும் கைகளால் உருவாக்கிப் பார்ப்பதில் முபஸிராக்கு மிகவும் ஆர்வம் அதிகம். எங்கேயாவது கைகளால் செய்த பொருட்களைக் கண்டால் அதை தானும் செய்து பார்க்கவேண்டும் என்று எப்படியாவது செய்து விட்டுத்தான் மறு வேலையைத் தொடங்குவார். முபஸிராக்கு தன் வாழ்க்கையில் இவ் கைவினை செய்வதில் வந்த ஆர்வமும் ஆசையும் வேறு எதிலும் வரவில்லை.

நிறைய கஷ்டங்களும் பிரச்சினைகளையும் தாண்டி தான் இந்த Craft பிஸினஸில் முன்னேறுவேன் என்ற நம்பிக்கையில் இருந்தார். இன்ஸ்டாகிராமில் மட்டுமின்றி பேஸ்புக், யூடியூபிலும் தனது இந்த பிசினஸை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் ஒரு மாதத்திற்கு ஒரு ஓடர் வருவதே கஷ்டமாகத் தான் இருந்தது. நிறைய காத்திருக்க வேண்டி இருந்தது ஆனாலும் என்னால் முடியும் என்ற நம்பிக்கையை மட்டும் அவர்









விடவில்லை. இப்பொழுது அல்ஹம்துலில்லாஹ் ஒரு நல்ல இடத்தில் உள்ளார்.

இப்போது பலபேரின் மனதில் முபஸிரா செய்த கைவினை பரிசில்கள் என்றால் மிகவும் விரும்பி வாங்கக் கூடியதாக மாறி இருக்கின்றது. நிச்சயம் இது இவருக்கு கிடைத்த ஒரு பெரிய வெற்றியே ஆகும். இவரின் வருங்கால ஆசை http://mubcreations.lk பிசினஸ் உலகம் பூராக டெவலப் செய்ய வேண்டும் என்பதே.



தொகுப்பு:
ஜே.எம்.பாஸித்



# வாலிபர்களும், கையாளும் முறைகளும்

## தொடர்ச்சி (பாகம்: 02)

சென்ற துணிந்தெழு"வின் 10வது சஞ்சிகையில் இடம் பெற்ற ஆக்கத்தின் அடுத்த பகுதியை உங்களோடு பகிர்வதில் மட்டில்லா மகிழ்ச்சி..

பிரச்சினை 06:
தன் பிள்ளை சிறந்த ஒழுக்கமான பிள்ளையாக வர வேண்டும் என்பது எல்லோரினுடைய கனவு. ஆனால், சிலர் வீட்டினுள்ளேயே, பெரிய கட்டுப்பாடு யாப்பு ஒன்றே தன் +18 வயது பிள்ளைகளுக்கும் வைப்பது

தீர்வு:
சில பெற்றோர்களின் நிலை இப்படித்தான் இருக்கிறது. நல்லது , கெட்டது எது என்பதை தன் கண்ணூடாக அறிய வேண்டுமென்றால், உலகத்தை பற்றி அறிய வேண்டும்.. அதற்கு வெளியில் முறையான நண்பர்களுடன் அனுப்பலாமே..!
"இந்த பிஞ்சு வயதில் ஓடிக்கொண்டே இருக்க வேண்டும்.. நதியை போல.. ஓரிடத்தில் தங்கினால், அழுக்காகி விடுவோம்..!"

பிரச்சினை 07:
எக்காரணம் கொண்டும் தன் மகனை இழிவாக பார்க்காதீர்கள்.

தீர்வு:
ஆதமின் மக்கள் அனைவரும் தவறு செய்பவர்களே, தவறு செய்பவர்களில் சிறந்தவர்கள் தவ்பா செய்பவர்கள்..
சில தவறுக்காக தண்டிக்காமல் கண்டிக்கலாம்.. ஆனால், இழிவாக நினைக்க கூடாது. இது உங்கள் குழந்தை அல்லவா..! "காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பார்களே..! நீங்கள் மரணித்தாலும், உங்கள் பிள்ளை உங்களது பிள்ளையே தான்..

பிரச்சினை: 08
குழந்தைக்கு தன் பேச்சால், மாற்றம் செய்தல்

தீர்வு:
நீ இதை செய்யாதே..! என்று கூறி விட்டு, அதை அவர்களே செய்தல்..
ஊருக்கு மட்டும் உபதேசமல்ல தனக்கும் தான்.. உங்கள் பேச்சால் பிள்ளைகளை மாற்றுவதை விட நடைமுறையில் மாற்றுவது பலமே பலம்..

பிரச்சினை: 09
தன் பிள்ளைகளுக்கு முன்னால், கெட்ட வார்த்தைகளை உபயோகிப்பது.

தீர்வு:
பிள்ளைகள் பேசினால், (அடிப்பன் சாக சொல்லி) இவ்வாறெல்லாம்.., பிள்ளைகள் கெட்ட வார்த்தைகளை பேசுவதில்லை, கேட்டதையே பேசுகிறன..! எம்மை முதலில் மாற்ற முயற்சிக்க வேண்டும்..!
இறைவனின் தொடர்பை அதிகம் கூட்டி கொள்ள வேண்டும்..

பிரச்சினை 10:
"தன் பிள்ளை எதிர்காலத்தில் பிரகாசிப்பானா.??"
யோசித்து யோசித்து சிலர் மன நோயாளி ஆகி விட்டார்கள்..!

தீர்வு:
கவலையை விடுங்கள்..! தன் பிள்ளையிடமே கேளுங்கள்.. "எந்த துறையில் விருப்பம்" என்று கேட்டு, அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குங்கள்..! உங்கள் ஆசையை திணிக்காதீர்கள்..!
உங்கள் ஒத்துழைப்பே பிள்ளைகளுக்கு ஆர்வத்தை தரும்..

"ஆய்வு செய்வதும் ஓர் ஆளுமையே..! ஆய்வு செய்து ஆரோக்கியமாக வாழ்வோம்..!"

**றஜா முஹம்மத் அப்துல் றசாக்**



# இதயம் பேசிய இரவுகளில் இருந்து

வாழ்க்கையானது ஒரு பெரிய பாடப்பரப்பு. இங்கு எல்லோருக்கும் வாழ்வின் பொழுதுகள் நல்லதாக அமைந்திடுவதில்லை. கண்ணீரும் , கவலையும் இல்லாததொரு வாழ்க்கையை யாரும் வாழ்ந்திருக்க முடியாது. சொல்லப்போனால் கண்ணீரும், கவலையுமே வாழ்க்கையை சுவாரஷ்யமானதாக நகர்த்திச் செல்பவை..

எவையெல்லாம் இறையருளாக நாங்கள் உணர்கிறோமோ அவை எல்லாமே எங்கள் மீதான சோதனைதான். உறவுகள் ஒரு சோதனை... உறவுகளால் ஏற்படும் பிணைப்பு ஒரு சோதனை...அதன் பின்னர் பரிமாறிக்கொள்ளப்படும் அன்பு ஒரு சோதனை...அன்பின் பின்னரான பிரிவு ஒரு சோதனை... பிரிவின் வலியில் நினைவும் ஒரு சோதனை...

ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். சோதனைகள் உங்களை பின் தொடர்கிறது என்றால் உம் இறைவன் உம்மோடு பேச நினைக்கிறான் என்று அர்த்தம்..

கடந்தகால நிகழ்வொன்றிலிருந்து மீண்டு வர வேண்டும் என்ற எண்ணம் எங்கள் எல்லோருக்கும் இருக்கும். ஆனால் நாங்களோ நடந்தவொன்றை நினைத்து நினைத்து எங்களை நாங்களே வெறுத்து ஒரு குறுகிய வாழ்க்கை வட்டத்திற்குள் வாழ முயற்ச்சிக்கிறோம். எல்லாவற்றுக்கும் மனம்தான் காரணம். மனதைத் திறக்காத எவருக்குமே உலகம் எவ்வளவு பரந்து வியாபித்தது என்பது தெரியாது...

வாழ்க்கை ஒரு நீண்ட பயணம். இங்கு யாருமே ஒருவருடனேயே எங்கள் உலகை சுருக்கிக்கொள்ள இயலாது. நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ எத்தனையோ நபர்களைக் கடந்துதான் எங்கள் வாழ்க்கையை பூரணப்படுத்த வேண்டி இருக்கிறது. இதில் இழப்புகள் என்பது இன்றியமையாத ஒன்று. இன்று எங்களோடு சிரித்துப்பேசி நொடிகளைக் கடத்தும் ஒருவர் நாளை இறை அழைப்பிலோ அல்லது காலவோட்டத்தின் வேகத்திலோ எம்மை விட்டும் திசைமாறிப் போகலாம்...

இழப்புகள் எங்களுக்கு கற்றுத் தருவது ஒன்றைத்தான். நாங்கள் இழந்ததை விட சிறந்தவொன்றை கூடிய விரைவில் சந்திக்க இருக்கிறோம் என்பதுதான் அது. மனித மனம் எப்போதுமே எதிலுமே குறித்த ஒன்றுடன் திருப்தி கண்டுகொள்வதில்லை. ஒன்றிலிருந்தும் மற்றொன்று சிறந்தது என்பதைத்தான் மனித ஆசைகள் சுட்டிக்காட்டுகிறது. இறை திருப்தியை பெற்றுக்கொண்ட ஓர் உள்ளத்தினால் மாத்திரம்தான் இறை விதியில் திருப்தி காண இயலும்..

காலம் எம் வாழ்வில் எமக்கு ஒரு விடயத்தை கற்றுத்தரும். எம் வாழ்வில் நாம் ஒருவரை இழந்துவிட்டால் அவரை விட சிறப்பான ஒருவரை வாழ்வின் பல காலகட்டங்களிலும் எங்கலால் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

மனிதன் பொதுவாகவே இழந்ததை நினைத்து வருந்தக்கூடியவன். அது இருந்தால் நன்றாக இருக்கும் அல்லது அப்படி இருந்தால் நன்றாக இருக்கும் என்றும் தங்களிடம் இல்லாத ஒன்றை எண்ணி வருத்தப்படும் நாம் எங்களிடம் இருக்கும் எதையும் நினைத்து திருப்திப் படுவதில்லை...

* யாரோ ஒருவனின் / ஒருத்தியின் காதல் எங்களிடம் இல்லாமல் இருக்கலாம் ஆனால் எங்கள் தாய் தந்தைகள் இன்றும் எங்களோடேயே வாழ்ந்துகொண்டிருக்கக் கூடும். தாய் தந்தை என்பது எம்மில் பலரின் கனவாகிப்போன ஒரு நிஜம்..
* பயணங்கள் செல்ல வாகனங்கள் இல்லையே என ஏங்கக் கூடும். இரு கால்களையும் நல்ல முறையில் தந்திருப்பதை மறந்துவிடக் கூடும்..

இதேபோல் இழப்புகள் எங்களை உடைந்தழச் செய்யும். அதற்காக நீரினில் மூழ்கிய கற்கள் போல நாங்கள் இருக்கக் கூடாது. இன்று எவற்றை நினைத்து அழுது தீர்க்குறீர்களோ , எந்தவொன்றின் நினைவில் இருந்து வெளிவர முடியாமல் தவிக்கிறீர்களோ , அப்படிப்பட்ட ஒருவராக நீங்கள் இருந்தால் நான் இப்போது உங்களிடம் சொல்லப்போவதை நன்றாகக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

“காலத்தின் நீர்மையில் இன்று நீங்கள் சிந்தும் கண்ணீரையும், கவலையையும், வலிகளையும் நினைத்து உங்கள் எதிர்காலத்தில்” அடடா ‘இதற்காகவா நான் அப்போதெல்லாம் அவ்வளவு வருத்தப் பட்டேன்” என நீங்களே உங்களை நினைத்து ஒரு நொடி சிரித்துக் கொள்ளுமளவிற்கு காலம் உங்கள் வாழ்க்கையை மாற்றும்...

அப்போது எவையெல்லாம் தற்சமயம் உங்களை ஆட்கொள்கிறதோ அவையெல்லாம் உங்கள் நினைவிலேயே இல்லாமல் போய்விடும். மாறாக முழு மனதுடன் நிறைந்த மகிழ்வுடன் அப்போது இறைவன் உங்களை வாழ வைத்திருப்பதை உணர்வீர்கள்.

“இறை நியதியில் எல்லாமே எங்களுக்கான நலவுகள்தான்” நாங்கள்தான் படைத்தவன் அன்பை உணர்ந்து கொள்ளாமல் படைப்பினங்களுடனான அன்பினில் மூழ்கி இருக்கிறோம்...

இலைகள் எல்லாம் உதிர்ந்து போனாலும் மீண்டும் வசந்த காலமொன்றில் மரங்கள் துளிர்ப்பதில்லையா ? எங்களுக்கான நேரம் வரும்வரை பொறுமையோடு இறைவனுக்கு நன்றியுடையோராய் வாழ்வோம்...

**இன்ஷாம் அலியார்**
**நிந்தவூர்...**

# அன்றைய தினம்



உறக்கத்து உறைவுக்கு திடுக்கிட்டுத் தடை விதித்து
எழுந்து தயாராகிப்
பெருந் தெருவுக்கு ஓடுகிறேன்

ஒரே மயான அமைதி பூங்காவின்
ரீங்கார ஓசை மட்டும் கொட்டும்
அமைதி போலவும் ஒரு நினைவு

முற்சக்கர வண்டியின் சிலைவைச்
சீர் செய்தவளாக பெருந் தெருவில்
பேருந்து தேடிய கண்களைக்
கானல் வழி மறிக்க அமைதியாக
கை கட்டி நின்றேன்

பேருந்து வரவேயில்லை

நந்தவனத்தில் ரீங்காரமிட்டு
உயிர்ப்பிக்கும் வண்டுகள் போல்
அச் சாலையை அமைதி கலைத்து
அசைகிறது அவ்வப்போது
சில வா.......க(ண)னங்கள்

அக் கணங்கள் நான்
அடக்கமானவளாகக் காத்திருந்தேன்
பேருந்து வரவேயில்லை

நாளிகை நாடிமேல் கை வைத்து
அட்டணக் காலிட்டு அமருமா
என்ன அதன் பாட்டிற்கு நகர்கிறது
கூடவே என் பொறுமையும்
போகிறது......

பாதங்கள் அதன் பொறுமையிழந்து
வீங்குகிறது நிற்கவோ நடக்கவோ
ஐந்து நிமிடங்கள் மேல் அடையேறும்
வலியின் கெடு கொஞ்சம் கொஞ்சமாக
முடிவுறத் துடிக்கையில்

சற்று கால்களை உதறுகிறேன்
பொறுமையின் முதல் உயிர்துளி
கழன்றகன்றது

அப்போதும் பேருந்து வரவேயில்லை....

மெது மெதுவாக வலியின் பணி ஆரம்பமாக
ரணம் எனப் பெயர் வாங்கியது
தேகம்

அப்போதும் கூட பேருந்து வரவேயில்லை

கானலைக் கிழித்துக் கண்களை வீசுகிறேன்
வலித்த தேகம் சரிந்து
விழச் சொல்லுகிறது
வீதி என்பதால்

முடியாது என்று மல்லுக் கட்டி நிற்கிறேன்

பேருந்து வரவேயில்லை........

குறி சொல்லும் பட்சிபோல் வந்த
மனிதர் ஒருவர் மட்டும் சொல்லிப் போனார்
இராணுவ ரோந்து நடை பெறுகிறது
பேருந்து அடை படுகிறது
அது வரவே வராது என்று

நான் பயணத்தைப் பாதை திருப்பி மீண்டும்
வீடு நோக்கி நகர்கிறேன்
மறுமுறை வைத்தியரிடம் சென்று
ஒப்பாரி வைத்தேனும் வைத்தியம்
பார்த்து வர அன்றாவது
பேருந்து வருமா என்ற ஏக்கத்துடன்

மூன்றாம் வார சிகிச்சைக்கும்
சமூகமளிக்காதவளாக!

**க.ஷியா**

# போதும்...



மணிக்கணக்கில் பேசத் தேவையில்லை,
ஒரு சிறு நலன் விசாரிப்பு போதும்...
தாயிற்கு ஈடாக இன்னொரு உறவு
தேவையில்லை,
தாய் மட்டுமே போதும்...

அரண்மனை போல் வீடு தேவையில்லை,
சந்தோஷமான வாழ்க்கை மட்டுமே
போதும்...
உறவுகளின் அறிமுகம் தேவையில்லை,
ஒற்றைப் புன்னகை போதும்...

இரவுகள் தேவையில்லை,
உறக்கம் இருந்தாலே போதும்...
உறக்கத்தில் கனவுகள் தேவையில்லை,
நிறைவேறும் ஓரிரு கனவு மட்டுமே
போதும்...
போலி வேஷம் தேவையில்லை,
உண்மையான நேசம் மட்டுமே போதும்...

வாழ்த்துக்கள் தேவையில்லை,
உங்கள் பிரார்த்தனைகள் மட்டுமே
போதும்...
இழப்புகளை எண்ணி வருந்தத்
தேவையில்லை,
பொறுமை மட்டுமே போதும்...
அகங்காரம் தேவையில்லை,
பணிவு மட்டுமே போதும்...
பணம் உள்ளோர் தேவையில்லை,
குணம் உள்ள ஒருவர் மட்டுமே போதும்...
பிரச்சினைகள் வளர வார்த்தைகள்

தேவையில்லை,
பார்வை மட்டுமே போதும்...
உதவிகளுக்கு நன்றிகள் தேவையில்லை,
பிராத்தனையில் இணைத்தால் மட்டுமே
போதும்...
என்னை ரசிக்கத் தேவையில்லை,
என் எழுத்துக்களை ரசித்தால் மட்டுமே
போதும்...
எனக்கு கவிஞர் எனும் பட்டம்
தேவையில்லை,
கலைஞர் என்ற அதி சிறந்த அங்கீகாரம்
மட்டுமே போதும்...

பேனா முனையில் அங்கீகாரத்தை மட்டும்
தேடும் இவள்,

**இளம் தாரகை**
**ஷஹ்னா ஸப்வான்**
**தர்கா நகர்**



# கடமையில் கண்ணாயிருத்தல்

அச்சிமுஹம்மது அகிலா
சம்மாந்துறை.

பலர் அவரவர்களின் போட்டோ எடுப்பதற்கு பல பல வகையான தொலைபேசிகளை வாங்கிக் கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் இந்த ஊரில் நாலாபக்கமும் எந்த தொழில் நுட்பமும் இல்லாமல் புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்கும் எங்கள் வயல் வெளிகளின் ரம்மியம் தான் என்ன?காலையில் எழுந்தவுடன் பச்சைப்பசேலென காட்சியளிக்கும் வயல்களின் நுனியில் இருக்கும் பனித்துளிகள். அப்படியே எங்கள் ஊரை படம் பிடிப்பதைப் போல் காட்சியளிக்கும். இந்த காட்சியை பார்த்தால் யாருக்குத்தான் பொறாமை வராது. எங்கள் ஊரின் சிறப்பு தனி ...
இப்படிப்பட்ட ஊர் தான் மடலஸ்ஸ .....

**வயல்வெளிகள் அதன் மத்தியில் சிறிய வீடு .பசுமை இதையெல்லாம் சுவர்க்கம் போனால்கூட ரசிக்க முடியாது. அவ்வளவு ரம்மியம். ஆஹா! நான் இந்த ஊரில் பிறந்தவள் என்பதற்கு எனக்கு ஆச்சரியமாக உள்ளது .முன் ஜென்மத்தில் அல்லாஹ்வுக்கு விருப்பத்துக்குரியவளோ என்னவோ தெரியவில்லை?** எதுவாக இருந்தாலும் பரவாயில்லை நான் இந்த ஊருக்கு உரியவளாகிவிட்டேன்.அவ்வளவுதான் எங்கள் ஊரின் பசுமை போலவே எங்கள் ஊர் மக்களும் அவ்வளவு பசுந்தானவர்கள் ."அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பதுபோல தான் எங்கள் ஊர் மக்கள் ஊரில் யாருக்கும் எந்த வேலை என்றாலும் ஒன்று கூடி விடுவார்கள் .பிரச்சினை என்றாலும் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுத்துப் பேசி சமாதானம் ஆக்கி விடுவார்கள் அவ்வளவு ஒற்றுமை .

எங்கள் ஊரில் சுவர் மதில் என்ற ஒரு வேறுபாடுகளும் இல்லை. அதே போன்று மற்ற ஊர்களை போன்று சீதனக் கொடுமைகளும் இல்லை. அவ்வாறுதான்பெண்கள் வீட்டில் சீதனம் கேட்டால் சொல்வார்கள் நீங்கள் கேட்கும் அனைத்தையும் தருகின்றோம் ஆனால் எங்கள் பிள்ளையை மாத்திரம் தரமாட்டோம் என்பார்கள்..
இவ்வாறுதான் எங்கள் ஊர் இப்படி ஒரு ஊரில் தான் ஒரு அழகிய குடும்பம் இருக்கின்றது

எங்கள் ஊருக்கு முன்மாதிரி என்றால் அவர்களை தான் கூற வேண்டும் அதுதான் ஹாசிம் ஹாஜியின் குடும்பம் அப்படி ஒரு பக்தியும், கடமையுணர்வும் கொண்டவர் .ஹாசிம் ஹாஜிக்கு ஒரு மகளும் 5 மகன்களும் இருந்தனர். மகள் பாத்திமா அவள் இஸ்லாத்தின்பால் கவரப்பட்ட பெண்களில் ஒருவராவார் .அவள் சிறுவயதில் இருந்தே மத்ராஸாவிற்குச் சென்று குர்ஆனை மனனமிட்டு .ஒரு சில வருடங்களுக்கு முன்பு தான் ஹாபிளாவாக பட்டம் பெற்றாள்.தனது தாயை இழந்திருக்கும் இச்சூழ்நிலையில் தன் வாப்பாவை கண்ணை இமை காப்பது போல பார்த்து வருகிறாள்.இவளின் கணவரும் ஒரு மௌலவிதான். ஹாஸிம்ஹாஜி ஊரில் அவ்வளவு வசதி பெற்றவர் அல்ல ஆனால் தான் செய்ய வேண்டிய கடமைகளை கவனமாக செய்து வருகிறார். பிள்ளைகளின் திருமணமும் கூட தனது மகன்களையும் நல்ல நிலைமைக்கு தான் வைத்திருக்கின்றார்கள் மூத்த நான்கு மகன்களும் நல்லபடியாக திருமணம் பண்ணி வைத்து விட்டார். இப்போது இருக்கின்ற இரண்டு பிள்ளைகளையும் பற்றித்தான் யோசனை..

"ஹாசிம் ஹாஜி அஸ்ஸலாமு அலைக்கும்......"என்றவாறே பக்கத்து வீட்டு நானா வந்தார்."

"வஅலைக்குமுஸ்ஸலாம் அமீர் வாங்க வாங்க என்ன கன காலத்துக்குப் பிறகு"

"என்ன ஹாஜி உங்களைப் போலயா? இந்த நாங்க வேல வேல வேல அதுதானே நமக்கு"

"என்ன இரண்டு நாளா பள்ளிப்பக்கம் ஆளாக் காணல்ல"
"ஓம்...ஓம் நான் நம்மட நரம்பொலக்கி வேல ஒன்னுக்கு போயிருந்தேன்" காலையில தான் வந்தேன்.

"மகள் பாத்திமா அமீர் நானா வந்தீக்கிய தேத்தண்ணி கொண்டு வாங்க"

"சரி வாப்பா இன்ஷா அல்லாஹ் கொண்டு வாரேன் "
"அதெல்லாம் வேணா ஹாஜி , நான் நீங்க பள்ளிக்கு இருப்பீங்க எண்டு நெனச்சன் அங்க கேட்டேன் இப்போதான் போனாருண்டாங்க.. அதுதான் வந்து பேசிட்டு போகலாம்டு நெனச்சன் "

"ஆ இப்பதான் வந்த இன்னும் சாப்பிடல்ல சுபஹ்'க்கு போனனான்"

"ஆ ஹாஜி நம்மட ரஹ்மானுக்கு நல்ல ஒரு கல்யாணம் வந்திருக்கு நாரம்பொல A/level வரைக்கும் படிச்சிருக்காம் வீட்டில் வேலைக்குப் போக வேண்டாம் என்று சொல்லிட்டாங்களாம் நல்ல ஒழுக்கமான பிள்ளை என்ன செய்றது ஹாஜி சொல்லுங்க "

"நல்லதெண்டா பாருங்களேன் எண்ட கடமையும் முடிஞ்சிடும் பெண் வீடெல்ல எப்படி நல்லமெண்டா முடிப்போம்.
நமக்கு சீதனம் எதுவும் தேவையில்லை பிள்ளை ஒழுக்கமாக அல்லாஹ்வின் பால் கவரப்பட்டவளாக இருக்கணும் இன்ஷா அல்லாஹ்"

"அதுக்கெல்லாம் குறையில்லை நல்ல பிள்ளைகள் ஆனால்

நம்முடைய ரஹ்மானுக்கு பிடிக்குமா ஹாஜி"

என்ன பிள்ளைகளை பற்றி உனக்கு தெரியாதா என்ட சொல்ல மீரமாட்டாங்க"

"சரி ஹாஜி அப்ப நான் மத்த விடயங்களை பார்க்க போய்ட்டு வாரேன் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு"

அல்லாஹ்வின் பொருட்டால் நல்லபடியாக கல்யாணம் முடிந்தது தனது கடைசி கடமையையும் சரியாக நிறைவேறிய மகிழ்ச்சியும் பொங்கியது. இவர் பள்ளிவாசலில் மோதினும் ஆவார். எப்படியோ பள்ளிவாசலின் தொடர்பாக இருப்பதே அவரது பொழுதுபோக்காக இருந்தது.

அவரின் குடும்பத்தின் கடமைகளை முடிந்ததும் அவர் அல்லாஹ்வின் கடமையாகிய பள்ளிவாசலில் தனது முழுக்கவனத்தையும் எடுத்தார். பள்ளியை துப்பரவு செய்வதிலிருந்து அதான் சொல்வது வரை அனைத்தையும் இவரே செய்தார். இப்படியே நாட்கள் கடந்தன. அவர் நினைத்தாப்போல் தனது சகல பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார். அவரின் மனதில் ஏதோ இனம் புரியாத மகிழ்ச்சி பொங்கியது .

ரமழானும் நெருங்கியது அவர் ரமழானின் அனைத்து கடமைகளிலும் ஈடுபட்டார். பள்ளியின் கடைசி பத்து வந்ததும் அவரும் இன்னும் ஒரு சிலரும் பள்ளியில் இஃதிகாப் இருந்தார்கள் .நோன்பு 26இல் சஹரும் செய்து சுபஹ் தொழுகை முடிந்து அனைவரும் சென்றுவிட்டனர்கள். ஹாஜியார் நிறைய நேரம் தஸ்பீஹில் இருந்தார் ..
.இஃதிஹாபில் இருந்த அவர்கள் அவர்களின் செயற்பாட்டில் ஈடுபட்டனர் கொஞ்ச நேரம் முடிந்து ஹாஜியாரை அழைத்தனர் அவரிடம் இருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை அருகில் சென்று பார்த்தால் நடு இருப்பில் கொண்டு இருந்தார் அவரது அசைந்து தங்களை வருமாறு அழைத்தார்.

தொட்டவுடன் ஹாஜியின் உடல் சாய்ந்தது பள்ளியில் இருந்தவர்களின் மனமும் கூட யாராலும் ஜீரணிக்க முடியாத வபாத் .யா ரப்பு ?நீயாக அவரை அழைத்துக்கொண்டாயா? இல்லை அவராகவே வந்து சேர்ந்தாரா? ஊரே ஓழமிட்டது.தனது தந்தையை இழந்த பாத்திமாவுக்கு தான் பாரிய இழப்பு தந்தையும் இல்லாத பாத்திமா அனாதையாக நின்றாள் .

கதறினாள் தன் கடமையை எல்லாம் முடிஞ்சு இனி என்னத்துக்கு நான் இருக்க என்று அடிக்கடி கேட்பார் இப்போது போய் சேர்ந்துவிட்டார்.

அனைத்து சடங்குகளையும் ஒழுங்காக முடித்து ஹாஸிம் ஹாஜியின் மடலஸ்ஸ ஜும்மா பள்ளிவாசலில் அடக்கம் செய்யப்பட்டது ஒரே மௌனம் சாதித்தது என்ன செய்வது எல்லாம் அல்லாஹ்வின் நாட்டம் .

என்ன செய்வது எல்லா மனிதர்களும் எப்போது ஒருநாள் அல்லாஹ்விடம் போகத்தானே வேணும் ...

நாம் எப்போதும் எமது கடமைகளை சரியாகச் செய்தால் அல்லாஹ்வின் உதவி எமக்கு எப்போதும் தேடி வரும் .

**இன்ஷா அல்லாஹ் என்னுடைய கதை மீண்டும் தொடரும்...**



# யானைப் பாதை!

யானை வழித்தடத்தினூடே
வளைந்து செல்கிறது
நீள்அரவ கருஞ்சாலை!

தொடர்பறுந்த வழித்தடத்தை
பிளிறல்பிசின் கொண்டு
ஒட்ட முயல்கிறது
வழியிழந்த யானையொன்று...

யானைப் பாதைக்கான
வரைப்படத்தை கூகுளிடம்
கேட்பது குறித்து
நடைபெறுகிறது
அசையும் குன்றுகளின்
அவசரக்கூட்டம்!

சிற்றெரும்போ
பெருங்களிறோ
பெரமோன்களை அழித்து
தடுமாறுவதை இரசிக்கிறது
பேராசை வதைகும்பல்!

பாதைத் தேடி
அலைந்து திரியும்
மனநோயாளி வாரணங்களுக்கு
கிடைப்பதென்னவோ
அங்குச ஊசிகளும்
மின்வேலி
அதிர்ச்சி வைத்தியமும் தான்

காட்டுப் புத்தகத்தை
மனிதக் கரையான்
மெல்ல அழிக்க
மனிதன் காட்டுக்கும்
யானை நாட்டிற்கும்
கட்டாயக் குடியேற்றம்!

வாழிடம் இழந்து
அகதியாக அலைந்து திரிவதில்
அதீதகோபம் கொள்கிறது கடகம்!

ஒரு மிதவாதி
மதவாதியாகி
தீவிரவாதியாக்கப்படுகிறான்
இங்ஙனம்!



**பா.சிவகுமார்**
**இந்தியா**




அகீப் நஸ்ர்

துணிந்தெழு துணிந்தெழு என்று பல
காரிகைகளை துணிந்தெழ செய்தாய்,

பல பேனாக்களை உன் பக்கங்களில்
கிறிக்கிடச் செய்தாய்,

துணிந்தெழ வழி அறியாத பலரை தேடித்
தேடி துணிந்தெழு குழுமங்களில்
வழி அறியச் செய்தாய்,

நம்பிக்கை இழந்து ஒதுங்கிய இன்னும் பல
மைக்களை மீண்டும் துணிந்தெழுவில்
துளிர்விடச் செய்தாய்,

உன் தளக்கோள வடிவத்திற்காகவே இங்கு
பலர் பேனாக்களில் கைவைக்க
தொடங்கிவிட்டனர்,

உன் அட்டைப் பட பக்கங்களில் ஒரு முறை
இடம் பிடிக்கவே இங்கு பல காரிகைகள்
துணிந்து விட்டனர்,

தனக்கான வெற்றி மட்டுமல்ல நம் வெற்றி
பிறருக்கான வெற்றியும் நம் வெற்றியென,

கூடவே பலரையும் அழைத்துச் செல்லும் உன்
போல் மனம் படைத்தவர்கள் தான் தேவை
இன்று,

பலருக்கு அங்கீகாரம் கொடுத்த உமக்கு
ASIAN INTERNATIONAL EXCELLENCE AWARDS-2021 எனும்
ஆசியாவின் மிகச்சிறந்த 100
சாதனையாளர்களுக்கு வழங்கப்படும்
சர்வதேச உயர் விருதானது உன் கைகளில்
வந்தடைய பெருமைப்படுகிறது.

வாழ்த்துக்கள்... இது உனக்கான வாழ்த்துக்கள்
அல்ல அவ் விருதுக்கான வாழ்த்துக்கள் இது.

23

# மருதூரின் முத்தொன்று கடல் கடந்தும் சாதனைகள் படைக்கிறது



ஆசியாவின் சொத்தென்று வெற்றியாளன் பட்டியலில்
பெயர் நாமம் பெற்றவனே.
வெற்றிகள் பல உன்னை முத்தமிடக் கண்டேன்.

விண்மீனாய் உயர்ந்து நின்று உலகெங்கும் ஒளி
பரப்ப எனதான பிராத்தனைகள்.

கள்ளம் கபடம் அற்ற வெள்ளை மனம் இறைவன்
கொடுத்த நல்ல குணம் அறிவிலும் உயர்ந்த இடம்
நற்ப்பிலும் நல்ல மனம்.

நேரில் கண்டதும் இல்லை ஆனாலும் கூட
இராப்பகலாய் இணயத்தில் நேரங்கள் தாண்டியும்
பேசிக்கொண்டோம் நமக்குள் நண்பர்களாய்.

இணயவளிச் சேவையின் இஸ்பகராய் துணிந்தெழு
சஞ்சிகையின் ஆசானாய் சமூகப்பணிகள் பலதில்
ஆர்வமாய் இன்றளவும் உள்ளங்களில் நீங்காமல் நீ.

உன்னை பெற்றவர்கள் ஆனந்தக் கடலில் மூழ்கிக்
கிடக்க யானும் உன் நண்பன் என்பதில் இணை
இல்லா பெருமயடா.

உற்றாருர் ஊராரும் மருதூர் மண்ணும்
வாழ்திடவே நண்பனாய் நானும் வாஞ்சையுடன்
வாழ்த்துகிறேன்.
உயர உயரப் பறந்து உச்சம் தொட உளமாற
வாழ்த்துகிறேன்.

சாதனைப்புரிசனாய் சரித்திரம் படைத்திட சதாவும்
நண்பனாய் சளைக்காமல் பிராத்தனைகள்.

**இவ் வரிகள் அன்பு நண்பன் பாலித்க்கு சமர்ப்பணம்.**

## வரிகள் :- கவிப்பொய்கை ஜவ்சன் அஹமட்

# வாழ்த்துப் பா..



ஆசிய இலங்கை இந்து
சமுத்திரத்தின் முத்து
அதில் கிழக்கு மண் தந்த பாஸித் எங்கள்
சாதனை சொத்து

பெண்களின் வீரச் செயலுக்காய் நீங்கள்
இட்டதோ ஓர் வித்து "துணிந்தெழு"
அதில் விதைப்பதோ
பெண்மையின்
தலைசிறந்த கருத்து

ஸ்கை தமிழ் அதில் உங்கள்
உலாவோ அழகிய எழில்

விமர்சனங்கள் பல தாண்டி
அத்தனையும் குழி தோண்டி
இரவு பகலாக வழி வேண்டி

விடியலுக்காய் விழித்திருந்து
பல கருத்துகளையும்
காத்திருந்து
களங்கள் பல அமைத்து
இன்று இணைய தளங்கள்
முழுக்க முழங்கும் சாதனை கிழக்கு
நாமம்

அத்தனை சிந்தனையும் ஒருங்கே
கொண்ட நூலகம்– நீ
எல்லை இல்லா வனகமும் –நீ

அன்று தன்னடக்கம்
தன்னகத்தே கொண்டு
தனி ஒருவனாய் துணிந்து நின்று
சாதனை மேடையில்
மிளிர்கிறாய் இன்று

பெற்றெடுத்ததோர் அன்னை அது தடம்
மாறாமல்
பெருமை சேர்த்ததோ தன்
சாய்ந்தமருது மண்ணை

சாய்ந்தமருது கண்ட விருட்சம்
அது தலை சாயாமல்
நிமிர்ந்து நின்று ஒளி வீசும் வெளிச்சம்

எதிர் காலம் காண வேண்டும்
இன்னும் பல சாதனை
சுபீட்சம் என்றும் அதை வாழ்த்தி
நிற்க்கும்
எங்கள் ஸ்பரிசம்

**ஆக்கம்:-**
**அஸ்மியா றமீஸ்**
**சம்மாந்துறை**

# என் இதயத்தின் ஆழத்திலிருந்து உனக்காய் சில வரிகள்...

அனைவரது திறமைக்கும் தனியாய்
ஓரிடம் கொடுத்து தனித்துவப்
படுத்தினாய்..

அதில் நானுமொருத்தி என்பதில்
மனம் நிறைந்த மகிழ்ச்சி தான்..
நீ கழித்த உன் வாழ்க்கைப்
பயணத்தில் மிக அதிகமான
உள்ளங்களை குறைவின்றி
சம்பாதித்த சாதனையாளன்

நீ..
இதை விட வேறென்ன வேண்டும்
அல்ஹம்துலில்லாஹ்..

வார்த்தைகளுக்குள் வரியிட்டு
முடிக்க உணர்வுகள் முடிவற்றவை
தான்..

இருப்பினும் என் பிரார்த்தனைகள்
குறைவின்றி உனக்காக
என்றுமிருக்கும்..

இன்னும் பல சாதனைகளை நீ
பெற்றிட மனம் திறந்து
வாழ்த்துகிறேன் என் இதயத்தின்
ஆழத்திலிருந்து....

**Sabra Ilmudeen**





மாபெரும் கட்டுரைப் போட்டி

# கட்டுரைப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட நழீப் மர்பினா (நட்பிட்டிமுனை - கல்முனை)

ஸ்கை தமிழ் நடாத்திய கல்முனை மாநகரசபை பிரதிமேயர் ரஹ்மத் மன்சூர் அவர்களின் வழிகாட்டலில் ரஹ்மத் பவுண்டேசன் அனுசரணையில் "மாபெரும் கட்டுரைப் போட்டி"

## தலைப்பு: கொரோனா நோயினை கட்டுப்படுத்துவதில் வக்சீன் (தடுப்பூசி) பாவனையின் முக்கியத்துவம்



Rs.5,000/-

இன்று உலக மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொடூரமான ஆட்கொல்லி நோயான கொரோனா வைரஸானது வேகமாக பரவி வருகிறது. உலகம் பூராகவும் பெண்கள், ஆண்கள், சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் வயோதிபர்கள் என்று எல்லாத் தரப்பு மக்களும் பரவலாக பாதிக்கப்பட்டு வருவதனை கண்கூடாக கண்டு வருகிறோம்.

2019 ஆம் ஆண்டின் பிந்திய பகுதியில் முதன் முதலில் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொவிட்-19 தொற்று நோய்ப் பரவலானது 2020 மார்ச் நடுப்பகுதியில் உலகம் முழுவதும் 'துரிதமாகப் பரவி உலகளாவிய தொற்று நோய்' ஆக அதனை பிரகடனப்படுத்ததுவதற்கு உலக சுகாதார அமைப்பினைத் நிர்ப்பந்தித்தது. உலகளாவிய தொற்று நோயானது இன்று வரை அனைத்து நாடுகளிலும் மனிதாபிமான மற்றும் பொருளாதாரம் இரண்டின் பாதிப்புக்களின் முன்னர் எதிர்ப்பார்க்கப்படாத சுவடொன்றினை விட்டுச் சென்றுள்ளது. இன்றைய காலப்பகுதியில் 178 மில்லியன் மக்கள் நோய்த் தொற்றுக்குள்ளாகியதுடன் 3.85 மில்லியன் **(2021-06-21 உலக சுகாதார அமைப்பு அறிக்கை)** மரணங்களை விளைவித்ததுடன் தற்போதுள்ள 'பெரும் முடக்கல்' தாக்கத்தின் பொருளாதார எதிரொலியானது 2007, 2008 காலத்தின் 'உலகளாவிய நிதி நெருக்கடி' இனைக் கூட சிறியதொன்றாக காண்பிக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. பல எண்ணிக்கையான நிச்சயமின்மைகளுக்கு மத்தியில் இத் தொடர் நெருக்கடியினை சமாளிப்பதற்கு உலகெங்குமுள்ள கொள்கை வகுப்பாளர்கள் போராடுகின்றனர்.

கொரோனா வைரஸின் அறிகுறிகளிகளாக முதன்முதலில் காய்ச்சலாக தொடங்கும், பின் வறட்டு இருமல், அதன் பின் ஒரு வாரம் கழித்து தொண்டை வலி, சுவாசக் கோளாறுகள் போன்றன ஏற்படுவதாகும். இவ்வறிகுறிகள் ஒருவருக்கு ஒருவர் அறிகுறிகள் மாறுபடும். காய்ச்சல் இல்லாத இன்புளுவன்ஸா தலைவலி நுகரும் உணர்வு இல்லாமல் போதல். தசைவலி, சளி, தொண்டை எரிச்சல் நெஞ்சுவலி போன்றனவாகும். காய்ச்சலுடன் கூடிய இன்புளுவன்ஸா தலைவலி நுகரும் உணர்வு இல்லாமல் போதல். தசைவலி, சளி, தொண்டை எரிச்சல், பசியின்மை, தொண்டை அடைப்பு போன்றனவாகும். ஜீரண மண்டலத்தின் அறிகுறிகளான தலைவலி நுகரும் உணர்வு இல்லாமல் போதல். தசைவலி, சளி, தொண்டை எரிச்சல், பசியின்மை, நெஞ்சுவலி, வயிற்றுப் போக்கு போன்றனவாகும். வயிறு மற்றும் சுவாசக் கோளாறு அறிகுறிகளான தலைவலி நுகரும் உணர்வு இல்லாமல் போதல். தசைவலி, சளி, தொண்டை எரிச்சல், பசியின்மை, நெஞ்சுவலி, வயிற்றுப் போக்கு, வயிற்று வலி, உடல் சோர்வு, மூச்சு விடுவதில் சிரமம் போன்றவாகும்.

கொரோனா வைரஸிலிருந்து பாதுகாப்பு பெறுவேண்டுமாயின் கைகளை குறைந்தது 20 நிமிடத்திற்கு கழுவ வேண்டும். கைகளின் அனைத்து பாகங்களுக்கும் சோப்பு மற்றும் நீரைக் கொண்டு நன்றாக கழுவிக் கொள்ள வேண்டும். கண்கள், மூக்கு மற்றும் வாயை தொடுவதை தவிர்க்க வேண்டும்.



மாபெரும் கட்டுரைப் போட்டி

இருமினாலோ அல்லது தும்மினாலோ டிஸ்யூ பேப்பர்களை பயன்படுத்துவதோடு அதனை மறக்காமல் குப்பை தொட்டியில் போட்டு கையினை கழுவிக் கொள்ள வேண்டும். டிஸ்யூ பேப்பர் இல்லாத சந்தர்ப்பங்களில் முழங்கை மூட்டை பயன்படுத்தி இருமுங்கள். காய்ச்சல், இருமல், சுவாசக் கோளாறு போன்ற அறிகுறிகள் இருப்பவர்களிடம் இருந்து தள்ளி இருப்பதோடு எங்கும் போகாமல் வீட்டிலேயே இருக்க வேண்டும்.

கொரேனா நோயினை கட்டுப்படுத்துவதற்காக பல்வேறுபட்ட தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றது. தடுப்பூசிகளானது உடலைத் தூண்டும் தயாரிப்புகளாகும். மனிதர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படும் போது, அது தடுப்பு மருந்தேற்றல் என்று அழைக்கப்படுகிறது. தடுப்பு மருந்தேற்றல் என்பது தீங்கு விளைவிக்கும் நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் எளிய, பாதுகாப்பான மற்றும் பயனுள்ள வழிமுறையாகும். நோய்களை நாம் தடுத்துக் கொள்வதற்கு தடுப்பு மருந்துகள் மிக அவசியமாகும். அந்த வகையில் தடுப்பு மருந்துகள் மூலம் நோய்களை வெற்றிகரமாக தடுத்துக் கொள்வது தொடர்பாகவும், சிறந்த சுகாதார பழக்கவழக்கங்கள் கொவிட்-19 வைரஸை தவிர்ப்பதற்கு மிக அவசியம் என்ற போதிலும் அவற்றின் மூலம் மாத்திரம் இந்த நோயிலிருந்து தற்காத்துக் கொள்வது சிரமமான காரியமாகும். அத்துடன் தடுப்பு மருந்துடன் நல்ல சுகாதார பழக்கங்களைப் பேணுவதே இந்நோயின் சவாலை வெற்றி கொள்ளவதற்கு தடுப்பு மருந்தானது தேவைப்படுகின்றது. பெரும்பாலான தடுப்பு மருந்துகளில் பிறபொருள் (antigen) துணையூக்கிகள் (adjuvant) பாதுகாப்பிகள் (preservatives) மற்றும் நிலைப்படுத்திகள் (stabilizer) அடங்குகின்றன. கொவிட்-19 தடுப்பூசியை பொருத்தமட்டில் இதில் செயலிழக்கம் செய்யப்பட்ட வைரஸ் வடிவத்தில் உள்ளதுடன், கொவிட்-19 நம்மை என்றேனும் தாக்கும் பட்சத்தில் அதை இணங்கண்டு தாக்க நம் உடலை பழக்கப்படுத்துகின்றது.

தற்போது பல வகையான தடுப்பு மருந்துகள் தயாரிக்கப்பட்டு தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றது. அவற்றினை நோக்கினால் கோவிஸீல்ட்டு தடுப்பூசியினை இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும், அஸ்ட்ரா ஜெனேகா மருந்து நிறுவனமும் உருவாக்கின. இத் தடுப்பூசியானது கிட்டத்தட்ட 90 சதவீத செயல் திறனை கொண்டுள்ளது. கோவெக்சீன் தடுப்பூசியினை ஐதராபாத்திலுள்ள பாரத் பயோடெக் நிறுவனம் தயாரித்துள்ளது. இத் தடுப்பூசியானது கிட்டத்தட்ட 81 சதவீத செயல் திறனை கொண்டுள்ளது. ஸ்புட்னிக் - வி தடுப்பூசியை ரஸ்யாவிலுள்ள கமலேயா நிறுவனம் தயாரித்துள்ளது. இத் தடுப்பூசியானது கிட்டத்தட்ட 91.6 சதவீத செயல் திறனை கொண்டுள்ளது. நோவெக்ஸ் தடுப்பூசியினை அமெரிக்காவின் நோவெக்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. இத் தடுப்பூசியானது கிட்டத்தட்ட 96.4 சதவீத செயல் திறனை கொண்டுள்ளது. பி.பி. மூக்கு வழியே செலுத்தப்படும் செலுத்தப்படும் தடுப்பூசியை ஐதராபாத்திலுள்ள பயோடெக் நிறுவனம் தயாரித்துள்ளது. பயோலொஜிக்ஸ் இ தடுப்பூசியினை ஐதராபாத்திலுள்ள பயோடெக் நிறுவனம் தயாரித்துள்ளது. ஜைடஸ் கேடிலா டி.என்.என்.ஏ எனும் தடுப்பூசியினை ஆமதாபாத்தின் ஜைடஸ் கேடிலா நிறுவனம் தயாரித்துள்ளது. ஜெனோவா எம்.ஆர்.என்.ஏ தடுப்பூசியினை புனேயிலுள்ள ஜெனோவா நிறுவனம் தயாரித்துள்ளது. போன்ற தடுப்பூசிகளினை குறிப்பிட முடியும்.



மாபெரும் கட்டுரைப் போட்டி

தடுப்பு மருந்தானது எவ்வாறு செயற்படுகின்றது என நோக்கினால் வைரஸின் உயிரற்ற ஒரு பாகம் (வைரஸின் மேற்பரப்பில் உள்ள ஒரு புரத வகை) தடுப்பு மருந்தில் உள்ளதுடன், நமது உடலின் இயற்கை நோய் எதிர்ப்புச் சக்திகளைப் பயன்படுத்தி, ஏ. தடுப்புநோய்க்கு எதிரான தடுப்பு ஆற்றலை கட்டியெழுப்ப மருந்திட்கு துணை புரியப்படுகின்றது. அத்துடன், B மற்றும் T எனப்படும் ஞாபகக் கலங்கள் மூலம் பலமான நோய் எதிர்ப்புச்சக்தி மற்றும் ஞாபகச் சக்தி உருவாக்கப்படுகின்றது.

தடுப்பூசியை எடுக்கக் கூடாதவர்களாக கருவுற்றுள்ள பெண்கள், பால் கொடுக்கும் தாய்மார்கள், 18 வயதை விடக் குறைந்தவர்கள், இதற்கு முன் தடுப்பு மருந்துகளுக்கு ஒவ்வாமை அறிகுறி வெளிப்படுத்தியவர்கள், தடுப்பு மருந்தொன்றின் ஏதேனும் ஒரு கூறிற்கு ஒவ்வாமை அறிகுறி வெளிப்படுத்தியவர்கள், ஏதேனும் மருந்து அல்லது உணவு வகைக்கு ஒவ்வாமை அறிகுறி வெளிப்படுத்தியவர்கள், ஒவ்வாமை தொடர்பான வரலாறு உள்ளவர்கள் மருத்துவமனையில் தங்கி மருத்துவ கண்காணிப்பின் கீழ் தடுப்பூசியை பெறுவதே சிறந்தது போன்றவர்களாவர்.

கொவிட்-19 தடுப்பூசிகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன என நோக்கினால் தற்போது கிடைக்கக்கூடிய பெரும்பாலான தடுப்பூசிகள் இரண்டு தடவைகளை பரிந்துரைத்துள்ளன. தடுப்பூசிகள் தசைவழியாக ஊசி மூலம் 21-28 நாட்கள் இடைவெளியில் கொடுக்கப்படுகின்றன.

தடுப்பூசியை எடுப்பதன் முக்கியத்துவத்தினை நோக்கினால் துரிதமாக தொற்று பரவக்கூடியதாகும். அது கடுமையான மற்றும் நீண்ட கால நோய் தொடர்பான சிக்கல்களை ஏற்படுத்தி, மருத்துவமனைப் படுத்தல் அவசியமாகி இறுதியில் மரணத்தைக் கூட இது ஏற்படுத்தக் கூடியதாகும். தடுப்பு மருந்தைப் பெறுவதன் மூலம் உங்களையும் உங்கள் குடும்பத்தினர் மற்றும் உங்களைச் சூழ உள்ளவர்களையும் இந்த நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம். சிறந்த உடலாரோக்கியத்துடன் இருப்பது மட்டுமே உங்களை இந்த நோயிலிருந்து உங்களைப் பாதுகாக்காது மற்றும் அதை வேறு ஒருவருக்கு தொற்றச் செய்வதை தடுக்காது. உங்களுக்கு கொவிட்-19 வைரஸ் தொற்றி, நோய் அறிகுறிகள் இல்லாதிருப்பினும், உங்களை அறியாமலேயே உங்களை நெருங்கிப் பழகுபவர்களுக்கு உங்களிடமிருந்து இந்நோய் தொற்ற வாய்ப்புண்டு. தடுப்பு மருந்தைப் நாம் பெறுவதன் மூலம் நம்மையும் ஏனையவர்களையும் பாதுகாக்க நாம் துணை புரிவதோடு இது ஒரு முக்கிய சமூகக் கடமையுமாகும்.

கொவிட்-19 தடுப்பூசிகள் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும் என்பதனை நோக்கினால் பல கொவிட்-19 தடுப்பூசிகள் அதிக அளவு விளைத்திறனைக் கொண்டிருப்பதாகத் தோன்றினாலும், எந்த தடுப்பூசியும் 100 சதவீத பாதுகாப்பாக இல்லை. ஆகையால், ஒரு சிறிய சதவீத மக்கள், அவர்களின் மரபணு மற்றும் உயிரியல் இயல்புகள் காரணமாக, கொவிட்-19 தடுப்பூசி பெற்ற பிறகு எதிர்பார்த்தபடி நிர்ப்பீடனத்தை உருவாக்க மாட்டார்கள். ஒரு தடுப்பூசியின் குறிப்பிட்ட இயல்புகளுக்கு மேலதிகமாக, ஒரு நபரின் வயது, அடிப்படை சுகாதார நிலைமைகள் அல்லது கொவிட்-19 நோய்த்தொற்றுக்கான முன்னரான தொற்று போன்ற பல காரணிகள் அவர்கள் கொவிட்-19 இலிருந்து எந்த அளவிற்கு பாதுகாக்கப்படுவார்கள்

## முதலாம், இரண்டாம் வெற்றியாளர்களின் கட்டுரைகள் அடுத்த சஞ்சிகையில் எதிர்பாருங்கள்

# வாழத்தானே வந்தார்கள்



அடக்காதீர்
அனாதைக ளவர்கள் அடக்காதீர்
ஆதரவற்றவர்க ளவர்கள் ஒடுக்காதீர்
ஆடம்பரர்களே அடிமைகளென
அடக்கியொடுக்காதீர்

காலையிலே கண்டம் நெருக்குவீர்
மாலையிலும் மண்டியிட கேட்பீர்
மனமெல்லாம் கல்லாய்
போனதென்னவோ
பிஞ்சுகளவர்கள் உங்கள் காலில்
கட்டெரும்பாய் ஆனதென்னவோ

வண்கை யளவின்றியும்
வாழ்வத தில் தர்மமே
வாழ்வுக்கே ஓர் அர்த்தமே
வரியோரின் வயிற்றுப்பசியாற்றினால்
பெரும் வரப்பிரசாதமே

தேன் போல குணமிருக்க
பால் போல மனமிருக்க
மாற்றாந்தாய் மக்களுக்கும்
மறுவீடே தாய் வீடு
மனிதமுள்ளோரின் வீடு

கொடுக்கக்கொடுக்க குறையாது
குப்பையிலும் குண்டுமணி
மங்கியதேது
அன்பிலே தான் அமுதமுண்டு
பெரும் பண்பிலே தான் பல்
புதுமையுண்டு

நேர்மையில் நெறியாயும்
உண்மையில் உத்தமனாயும்
வாழ்ந்திருந்தால் வாழும் நாளே
வசந்தம்தான்
அன்றியும் அகத்திலே அழகிருக்க
புறத்திலே துளி கறையென்றாலும்
கசந்து போகும் காலம்
மொத்தமும்தான்

அதிகாரக்காரர்களே
வரியோரும் வாழத்தான் வந்தாரென
வழி செய்து கொடுங்கள்
வழி காட்டி நடங்கள்
அன்பென்ற ஆறுதலின் முன்னே
அதிகாரமென்ற ஆணவத்திற்கு
ஆயிசு அற்பமே

**இஷாதா முஹம்மத்**
**ஏறூர்**

# நபிகளார் சொன்னவைகள் எங்கே



நானிலம் போற்றும்
நற்குண வாதியாய்
திகழ்ந்த அண்ணல் நபி
சொன்னவைகள் எங்கே......

மறுமையை முன்னிறுத்தி
வாழ்ந்த மாமனிதர் அவர் – நாம்
மறுமையையே மறத்து
வாழ்வதேனோ......

சாதி,மதம் என மாய கண்ணாடி
அணிந்து பார்க்காது சகஜமாய்
வாழ்ந்த சக மனிதர் அவர் – நாம்
சாதி, மதத்திற்காக அடித்து, எரித்து
வெறிபிடித்தவனாய்
அலைவதேனோ....

எதிரியாய் இருந்தாலும்
எதையும் எதிர்பார்க்காமல்
உதவிய உத்தமர் அவர் – நாம்

உதவி என்ற பெயரில் ஏழைகளின்
மானத்தை விளம்பரம்
செய்வதேனோ....

நீதிக்கே நீதி
அழித்த நீதியரசர்
அவர் – நாம்
வாய்மை வெல்ல
வேண்டிய இடத்தில்
நீதியை விற்பதேனோ....

சமத்துவத்தையும்
சன்மார்க்கத்தையும்
கற்று தந்த அண்ணல்
நபிகளார் சொன்னவைகள்
எங்கே.....

**அம்னா இர்ஷாத்**
**கம்பளை ஆண்டியாகடவத்தை**

# சமூக சேவைக்கான நட்புறவு ஒன்றியத்தின் புதிய குடிநீர் இணைப்பு வழங்கும் செயற்திட்டம்..!

அடிப்படை குடிநீர் வசதி இல்லாமல் காணப்படும் வறிய குடும்பங்களை தெரிவு செய்து அவர்களுக்கான புதிய குடிநீர் இணைப்பினை வழங்கும் செயற்திட்டத்தினை சமூக நோக்கினை அடிப்படையாகக் கொண்டு இலங்கை முழுவதும் இயங்கி வருகின்ற "சமூக சேவைக்கான நட்புறவு ஒன்றியம்" முன்னெடுத்து வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக ஒலுவில் பிரதேச இணைப்பாளர் நிஜாஸ் வஹாப்தீன் அவர்களின் வேண்டுகோளை ஏற்று ஒலுவில் பிரதேசத்தில் அடிப்படை குடிநீர் வசதிகள் அற்ற சமுர்த்தி பெறுகின்ற தெரிவு செய்யப்பட்ட சில குடும்பங்களுக்கு இவ் புதிய இணைப்புக்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

சமூக செயற்பாட்டாளர்களின் நிதி பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டுவரும் மேற்படி நிகழ்வில் ஒன்றியத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஸாஹீர் அஹமட் அவர்களும் கலந்துகொண்டார்கள்.

இவ் அமைப்பின் தலைவர், செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட இணைப்பாளர் அனைவருக்கும் பயனாளிகள் நன்றிகளை தெரிவித்தனர்.











4ஆம் பக்கத் தொடர்ச்சி





வாழ்க்கைக்கு அடுத்தகட்ட வெற்றிக்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தது. அதுதான் "ஆலையடிவேம்பு சிவனருள் தொழிற் பயிற்சி நிலையத்தில்" கம்பியூட்டர் கிராபிஸ் டிசைனின் பயிற்சி போதனாசிரியராகப் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றார். இப் பயிற்சி நிலையம் தாய் தந்தை இளந்த பிள்ளைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் போன்றவர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். இதில் பாஸித் இரு வருடம் ஆசிரியராகப் பணியாற்றினார். ஒரு இணையதள வடிவமைப்பாளர் என்ற நிலையில் இருந்து ஆசிரியர் என்ற ஒரு நிலைக்கு முன்னேறிச் செல்வது அவ்வளவு இலகுவான காரியமல்ல. இதற்காக அவர் எவ்வளவு கடின முயற்சிகளை மேற்கொண்டிருக்க வேண்டும் என்று என்னை யோசித்துப் பார்க்க வைக்கிறது.

பாசித் தனது வாழ்க்கை, தனது தேவை என்ற ஒரு சுயநலத்தோடு நின்றுவிடாமல் இவர் ஒரு இணையதள வடிவமைப்பாளர் மற்றும் ஓர் ஆசிரியர் என்பதையும் தாண்டி இவர் ஒரு சமூக செயற்பாட்டாளராகவும் திகழ்கின்றார். வாழ்க்கையில் சில விடயங்களில் முயற்சி மட்டுமல்ல அதனுடன் சேர்ந்து அதிர்ஷ்டமும் வேண்டும். அந்த அதிர்ஷ்டம் எவ்வாறு ஒரு மனிதனுக்கு கிடைக்கிறது? நாம் யாரோ ஒருவருக்கு ஏதோ ஒரு வகையில் எந்தப் பிரதிபலனையும் எதிர்பாராமல் செய்த ஒரு நன்மை நம்முடைய வாழ்க்கையில் ஏதோ ஒரு வகையில் இறைவன் அந்த நன்மையை மீண்டும் எமக்கே கொண்டு வந்து சேர்ப்பான். அது கூட பலரின் அதிர்ஷ்டத்திற்கு காரணமாக இருக்கலாம். இதுவே பாசித்தின் வாழ்க்கையின் அதிர்ஷ்டத்திற்கான இரகசியமாகக் கூட இருக்கலாம். இவர் சாய்ந்தமருது பிரேவு இளைஞர் கழகத்தின் தலைவரும் மற்றும் முன்னாள் இளைஞர் கழக சம்மேளனத்தின் உறுப்பினருமாவார். இவர் ஒரு துறையை மட்டும் சார்ந்து இல்லாமல் பல துறைகளுக்குள்ளும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் ஒரு துடிப்பான இளைஞன் என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது. பாஸித் தேசிய ரீதியில் இடம்பெற்ற இளைஞர் மாநாடுகள் மற்றும் பல்வேறு நிகழ்வுகளிலும் பங்குபற்றியுள்ளார்.

இவரின் இந்த சமூக ரீதியான செயற்பாடுகளின் விளைவாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காலத்தில் ஜனாதிபதி மக்கள் தொடர்பாடல் அதிகாரியாக சாய்ந்தமருது பிரதேசத்தில் நியமிக்கப்பட்டார். இவருக்கான நியமனக் கடிதம் (07.08.2019) அன்று கிடைக்கப் பெற்றது. இந்த நியமனம் இவர் சமூகத்துக்கு ஆற்றிய சேவைகளின் பிரதிபலிப்பு என்றே கூற வேண்டும். **இவரின் இந்த ஆளுமைகள் மற்றும் சமூக சேவைகள் காரணமாக இவருக்கு இளைஞர் ஆளுமை தலைமைத்துவம் மற்றும் சமூக அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக பிரித்தானிய நாட்டின் "எடின்பார்க்" பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் சர்வதேச "வெண்கல" விருது 2017யில் வழங்கப்பட்டது.**

இவ்வாறு கிராபிக்ஸ் எடிட்டிங் மற்றும் சமூக சேவைகள் என்று நகர்ந்த இவரது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக ஊடகத் துறையில் பயணம் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. பாசித்தைப் பற்றி இன்று சமூக வலைத்தளங்களில் பிரபல்யமாக பேசப்படுவதற்கு இவரின் இந்த ஊடகத்துறை பயணமே ஒரு முக்கிய காரணமாக இருக்கின்றது. வியூகம் முகநூல் ஊடகத்தில் பணிப்புரியும் வாய்ப்பே இவரின் ஊடகத் துறை பயணத்தின் முதல் வித்திட்டது. அங்கு பணிபுரிந்த போது வியூகம் ஊடகத்தின் அனுசரணையுடன் இவர் 2017 ஆம் ஆண்டு கட்டார் நாட்டுக்கு 20நாள் ஊடகப் பயணத்தை மேற்கொண்டார்.

அதைத் தொடர்ந்து பாஸித்தின் வாழ்க்கையில் அடுத்த கட்ட நகர்வாக தனது வேலை வாய்ப்பிற்காக 2019 ஆம் ஆண்டு கட்டார் நாட்டை நோக்கி பயணமானார். கடல் தாண்டிச் சென்றாலும் தனது ஊடகத்துறை பயணத்தை நிறுத்தவில்லை. காரணம் இவருக்கு ஊடகத் துறையில் இருந்த ஆர்வம் கட்டார் நாட்டிலும் தனது ஊடகப் பயணத்தைத் தொடரத் தூண்டியது. ஆனால் இம்முறை ஏனைய ஊடகங்களுடன் இணைந்து கொள்ளாமல் தனக்கென ஒரு சொந்த ஊடகத்தை உருவாக்க நினைத்தார். பாஸித் தனது சொந்த சமூக வலைதள ஊடகத்தை 2020 – கட்டார் நாட்டில் ஸ்கை தமிழ் எனும் பெயரில் உருவாக்கினார். இவருக்கு இருந்த எடிட்டிங் திறமையும் ஏற்கனவே இருந்த ஊடக அனுபவமும் ஸ்கை தமிழ் ஊடகத்தை சிறப்பாக நடாத்திச் செல்ல ஒரு உந்து சக்தியாக அமைந்தது. தற்போது பிரபல்யமாக் காணப்படுகின்ற பெண் ஆளுமைகளை வெளிக்கொண்டு வரும் துணிந்தெழு எனும் நேர்காணல் நிகழ்ச்சியை ஸ்கை தமிழ் ஊடகமே வழங்கிவருகின்றது. காணொளி வடிவில் மட்டுமே வெளிவந்து கொண்டிருந்த இந்த நிகழ்ச்சியை துணிந்தெழு எனும் பெயரில் ஒரு சஞ்சிகையாகவும் வெளியிட ஆரம்பித்தார்.

இத் துணிந்தெழு சஞ்சிகை பெண் திறமையாளர் மற்றும் ஆண் திறமையாளர்களுக்கு மட்டும் களம் அமைத்துக் கொடுக்காமல் ஏனைய வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்கும் ஒரு களமாக இருக்கின்றது. தான் மட்டும் முன்னேற வேண்டும் என்ற சுயநலம் இல்லாமல் ஏனையவர்களுக்கும் முன்னேறுவதற்கு வாய்ப்பளிக்கும் தளமாக துணிந்தெழு சஞ்சிகையை பாசித் அமைத்துக் கொடுத்துள்ளார்.

தன்னை ஒரு எழுத்தாளராக இச்சமூகத்திற்கு அடையாளப்படுத்திக்கொள்ளும் ஒரு வாய்ப்பை இவ் துணிந்தெழு சஞ்சிகை எல்லோருக்கும் வழங்குகிறது. இவ் சஞ்சிகை வெளிவரத் தொடங்கிய சிறிது காலத்திலேயே பிரபல்யம் அடைந்ததால் கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் "துணிந்தெழு" சஞ்சிகை தொடர்பாக தனது தூதுவராலயத்தில் பாஸித் மற்றும் சஞ்சிகை குழுவினரை அழைத்து பாராட்டுக்களைத் தெரிவித்தார். கட்டார் நாட்டில் தனது வாழ்வாதாரத்திற்கான வேலையையும் செய்துகொண்டு எந்தவொரு பிரதிபலனையும் எதிர்பாராமல் ஸ்கை தமிழ் எனும் ஊடகத்தின் கீழ் துணிந்தெழு சஞ்சிகை மற்றும் நேர்காணல் நிகழ்ச்சியின் மூலம் எல்லோருக்கும் தனது திறமைகளை வெளிக்காட்டும் ஒரு தளமாக நடாத்திக் கொண்டு வருவது ஒரு தனித்திறமையே. வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என்று கனவு மட்டுமே காண்பவர்களுக்கு மத்தியில் அதனை சாதித்து காட்டுபவர்கள் ஒரு சிலர் மாத்திரமே. இன்று சாதனை நாயகனாகத் திகழும் இவரது இந்த சாதனைப் பயணம் தொடரவும் மற்றும் இது போன்ற இன்னும் பல வெற்றிகளைப் படைப்பதற்கும் இறைவனை பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

# அனைத்து பதிப்புகளும் டிஜிட்டல்
## தொழில்நுட்பத்தில் உங்கள் கைகளில்...






sky தமிழ் NEWS

தனித்துவமே நமது அடையாளம்

www.news.skymediasl.com
இணையதளத்திற்கு
பிரவேசியுங்கள்

@skytamil.lk

**துணிந்தெழு இதழில் உங்கள்**
**விளம்பரங்களைப் பிரசுரிக்க**
**தொடர்புகளுக்கு**
**077 639 11 88**
**077 247 1464**



9 772792 102002


DESIGN: BASITH JM